உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰௪. { வெகுதானிய. புரட்டாசி } மலர் ௬

க. சாந்துப் புலவர் 203
சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்

உ. தமிழ்மொழியை வளர்த்தற்குரிய வழிகள் 209
திரு. C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள் M.A., B.L.

ஈ. யசோதர காவியம்—புத்துரை 214
திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்

ச. மற்றும். சோழர் கோயிற்பணிகள் 223
திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்

ரு. வள்ளல் மலையமான் திருமுடிக் காரி 231
திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்

சு. கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி இருபத்திரண்டாவது ஆண்டுவிழா 241

எ. புத்தக மதிப்புரை 242
பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சாவூர்.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪ | வெகுதானிய, புரட்டாசி | மலர் ௬

## சாந்துப் புலவர்

சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்

இவர் சிறுகம்பையூரில் வதிந்த இரண்டாவது சர்க்கரைப் புலவரின் முதற்புதல்வராவார். இவர் தம்பிமார் சீனிச் சர்க்கரைப்புலவர் சீனிப்புலவர் முத்துமுருகப்புலவர் முதலானோர். இவர் தம் தந்தையாகிய இரண்டாவது சர்க்கரைப் புலவரவர்களிடம் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுவந்தனர். அக்காலத்து கி. பி. 1780 முதல் 1801 வரை சிவகங்கையை ஆண்டுவந்த பெருங்கொடையாளரும், ஐதராலியின் உதவியைக்கொண்டு நவாப்பை முறியடித்த பெருவீரருமாகிய மருதுபாண்டியன் என்பவர் சேதுமார்க்கத்திலுள்ள கலியநகரியில் அன்னசத்திரம் கட்டுவித்தற்கு வந்திருந்ததைக்

கேள்வியுற்ற சக்கரைப் புலவர் அம்மருதுபூபதியைப் பார்க்க விரும்பி அட்ட நாகபந்தமென்னும் சித்திரக் கவியொன்று எழுதி வைத்துவிட்டுத் தாம் சிவபூசை செய்யச் சென்றனர். அச்சமயத்தில் அங்குசென்ற சாந்துப்புலவர் ஆண்டினில் இளையராயினும் அறிவின் முதியாராதலின் தமது தந்தையார் எழுதிவைத்திருந்த அட்டநாகபந்தத்தைப் பார்த்து, தாமும் அதனுள் அட்டநாகங்களைச் சிறிய வடிவாய் வரைந்து ஒரு செய்யுளையும் எழுதி முன்னிருந்த இடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டனர்.

வழிபாடுமுடித்து உணவருந்திவந்த புலவர் தமது பரிசனங்களுடன் சிவிகையூர்ந்து கலியநகரிக்குச் சென்றார். இவர் வரவறிந்த மருதுபாண்டியனவர்கள் எதிர்கொண்டுஅழைத்துப்போற்றினர். புலவரும் தாம் அவரைப்பற்றிப் பாடித் தன்னினைவிலிருந்த அட்டநாகபந்தச் செய்யுளைச் சொல்லிப் பொருள்கூறிப் பின் அக்கவிவரைந்த ஏட்டினை அரசரிடம் கொடுத்தார். அதனையேற்றஅரசர்படித்துப் பார்த்துமகிழ்ந்து புலவரைநோக்கிக் ''கவிராசரே தாங்கள் எழுதியஅட்டநாகங்களும்-குட்டிபோட்டுளவே என்னை'' என்று வினவ, அதனை நுண்ணறிவால் உணர்ந்தபுலவர் குழந்தையைக் கேட்கவேண்டுமென மறுமொழி கூறினர். அம்மொழிகேட்டஅரசர் ''அக்குழந்தை எங்குளது யாருடையது'' என வினவியறிந்து அக்குழந்தையைப்பார்க்கவேணுமென்ற பெருவிருப்பினால்உடனே சிவிகையைச் சிறுகம்பையூருக்கு அனுப்பி அழைத்து வரச் சொல்லினர். அதுகேட்டுஇராசதிருட்டியாகுமே என்றுபயந்த புலவர் தாம் ஊருக்குப்போய் குழந்தையை அனுப்புவதாய்ப் பன்முறை கூறியும் பார்க்கவேணுமென்ற அவாமேலிடலால் பாண்டியனவர்கள் புலவர் சொல்லை மறுத்துவிட்டனர்.

அரசரேவலால் சிறுகம்பையூருக்குச் சென்ற சிவிகை சிறிது பொழுதிற்குள் இளம்பருவத்தராய சாந்துப்புலவரை ஏற்றிக்கொண்டு வந்தது. குழந்தை வரவறிந்த மருதுபாண்டியன் மகிழ்ந்து குழந்தையைத் தழுவி ''இதிற் குட்டி நாகம் வரைந்து பாட்டெழுதினவர் யாவர்'' எனக் கேட்டளவில் குழந்தையும் எழுதினவன் யானே எனத் துடுக்காய்ச் சொல்ல, முன்னே முளைத்த காதினும் பின்னே முளைத்த கொம்பு வலியுடைத்து என்னும் பழமொழிக்கிலக்காவார் இவரேயென்றுள மகிழ்ந்த பாண்டியனவர்கள் சக்கரைப் புலவரை நோக்கி, கவிராசரே! இன்றுமுதற் குழந்தை என்னருகிலிருக்க வேண்டு

மென்று சொற்றனர். அதுகேட்ட புலவர் திகைத்து சிறிது தேறி அரசே இலக்கிய இலக்கணங்கள் படித்து வருகின்றமையால் ஒருவாறு முற்றியபின் யானே கொண்டுவந்து தங்கள் சமுக வித்துவானாக இருக்கச் செய்கின்றேன் எனவேண்டினர். "குழந்தை இப்பொழுதே பெரும்புலவர் தான் இன்னும் புலவராக்க விரும்பினுல் தாங்களுங் கூட வந்திருக்கலாகும், அன்றேல் என்னருகிலுள்ள வித்துவான்களைக்கொண்டு படிப்பித்தலுமாகும்" என்று அரசர் சொல்லிய பின்னரும் மறுத்தற்கஞ்சிய சர்க்கரைப்புலவர் ஸ்ரீராமபிரானும் தனயரை விசுவாமித்திர முனிவர்கையில் பிடித்துக்கொடுத்த தசரதனைப்போல் பதினாராட்டைப் பிராயத்துத் தனயராகிய சாந்துப் புலவரை மருதுபாண்டியனிடம் ஒப்புவித்து தம்முளம் வருந்தித் தம்மூர் சார்ந்தனர்.

தந்தையாரால் ஒப்புவிக்கப்பட்ட இளம் புதல்வராகிய சாந்துப் புலவர் அன்று முதல் மருதுபூபதியின் அரண்மனையில் அரசினம்புதல்வரென வளர்க்கப் படுதலால் அரண்மனைக் குழந்தையென யாவரானும் பாராட்டிப் போற்றப்பட்டு மருதப்பபூபதியின் புகழெனும் தொட்டிலிலாடி அவரது அவைக்களத்துப் புலவர்களாகிய செவிலியரால் கல்வியமுதூட்டப் பெற்று, கவிச்சிரோ ரத்தினமென்று பெரும் புலவர்களெல்லாம் கொண்டாடும்படி, பல சித்திரங்களுமமைய நிமிஷகவி பாடுவதிலும், சொற்பொழிவாற்றுவதிலும், நாவன்மையுடையவராய் நடுநாயகமாய் விளங்கினர். அன்றியும், மருதுபாண்டியனுக்குக் கண்ணுண்மணியெனப்பிரதிநிதியாயுமிருந்து அரசியற் செயல்களை ஆற்றிவந்தனரென்றும் கூறுப. இது "எங்களிந்திரன்சாந்து மகிபாலவாலகவீச்சுரனே" என்ற மயூரகிரிக் கோவைச் சிறப்புப் பாயிரச் செய்யுளடியால் புலனும்.

இவ்வாறு தமிழ்ப் புலவர்களிடத்துப் பேரார்வங்கொண்டு போற்றிய, மருது துரையவர்கள் அவைக்களத்து சவ்வாதுப் புலவர் வெண்பாப்புலிப் புலவர் முத்துமாரியப்பேந்திரக் கவிஞர் முதலான எண்ணிறந்த புலவர்கள் இருந்தனர் என அக்காலத்து வாழ்ந்த வாலசரஸ்வதி முத்துவேலுக்கவிராசர் தாம் நவாப்பின் அமைச்சராகிய இராமசாமிப்பிள்ளை என்பவருக்கு எழுதிய ஓலைத்துக்கில் விளக்கியதோடு தாமும் அவ்வவையினரென கூறியுள்ளார். அச்சீட்டுக்கவியில் "கல்விப் பிரசங்கி சர்க்கரையுதவு சாந்துக்கவிச் சிரோரத்னம்" என

நம் சாந்துப் புலவர் புகழப்படுகின்றார். மேல் முத்துவேலு கவிராசர் குறிப்பிட்ட அடியில் கல்விப் பிரசங்கியென இரண்டாவது சர்க்கரைப் புலவரைப் புகழ்ந்ததோடு அவரால் பெறப்பட்ட சாந்துப்புலவரைக் கவிச்சிரோரத்தினம் எனக் குறிப்பிட்டுப் புகழ்ந்ததும் கூர்ந்து நோக்கத்தக்கது.

மருது துரையவர்கள் அவைக் களப்புலவராய புலவர் பலராலும் பாராட்டப்பெற்று அப்பாண்டியனது மருங்கேயிருந்த சாந்துப்புலவர் பாடிய நூல்களில் இக்காலத்துக் கிடைத்திருப்பது மயூரகிரிக் கோவையாம். இராசபிளவையேற்பட்டு வருந்திய மருதுபாண்டியனவர்கள் மந்திரமாதிய நன்முறைகளால் அஃதொழியாமை கண்டு தளருகிலையில் அங்குவந்த முதியவரொருவர் முருகனடியார்களால் திருநீறளிக்கப்பெறின் அநுகூலமாமெனவும், நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிள்ளைகளுக்குக் குமரக்கடவுள் பிரசன்னமுள்ள குலதெய்வமாகலால் அவருள் எவரேனும் வீபூதிபோடுவது நலமெனவும் கூறக்கேட்ட அரசனின் உத்திரவுகொண்டு சென்ற ஏவலாளர் எருத்துமாட்டிலேற்றிய உப்புவாணிகராகிய காடன் செட்டியாரைக் கையோடு கொண்டுவந்து அரசன்முன் விட்டனர். செட்டியாரும் யாதாமோ என்று பயந்து நின்ற நிலையில் பாண்டியன் முகமன்கூறி "உமது குலதெய்வமாகிய முருகக் கடவுளுக்குப் பிரார்த்தனைபண்ணியான்இப்பிளவையால் வருந்ாது பிழைக்கும் வண்ணம் வீபூதியளிப்பீராக' எனச் செட்டியாரும் சிறிது மனந்தெளிந்து 'இந்தமருதுபாண்டியனுக்குற்ற நோயைத் தீர்த்தருள்செய்து என்னையும் இவ்விடத்தினின்றும் விடுவிக்கவேண்டும் சண்முகநாதா' எனச்சிந்தித்து விபூதியுதவினர். பலநாளுறக்கமற்ற பாண்டியன் அன்றிரவு அயர்ந்து தூங்கும்பொழுது இளந்துறவியொருவர் மயிற்றோகையுடன் வந்து தன் பிளவையைப் பிதுக்கி அதன் ஆணியை யெடுத்து வாழையிலையில் வைத்துவிட்டுப் பிளவைவாயில் திருநீற்றைப் பூசியதாகக் கனவுகண்டு அச்செயல்யாவும் நனவாகவே யிருக்கக்கண்டு மகிழ்ந்து வியந்த மருது துரையவர்கள் தம்மாதரவில் அச்சமுற்றிருக்கும் காடன் செட்டியாரைத் தம்மருகிலழைத்து 'அப்பனீ, அம்மைநீ' எனப்புகழ்ந்து அன்றுமுதல் அவரை அண்ணு என உறவுமுறை பாராட்டித் தம்முடனிருக்க வேண்டியதோடு அவர்வழியாகத் தமக்கருள்செய்த தெய்வம் மயில்மலைக் கடவுளாய முருகனே யெனக் கேட்டுணர்ந்து

அண்ணன் காடன்செட்டியாரோடு குன்றக்குடிக்குப் போந்து என்றுமினிய பெருமானை வத்தி வாழ்த்தினர். முருகன் வீற்றிருக்கும் மலைகாடடர்ந்து பொலிவிழந்திருந்ததைக்கண்டு பொருத துரையவர்கள் காடுவெட்டிச் சீர்ப்படுத்தி மதில் கோபுர முதலியவற்றைச் செய்து புதுமுறையிற் பீடத்தை மாற்றியமைத்து கும்பாபிடேகம் (குடமுழுக்குவிழாச்) செய்தும் ஆயிரக்கால் மண்டபம் கட்டியும் செம்பொன்மாரி முதலிய கிராமங்களை அளித்தும் தென்னஞ்சோலை வைத்து வளர்த்தும், மருதாபுரியென்னுந் தடாக முண்டாக்கியும், முருகன் எழுந்தருள வெள்ளிமயில் திருத்தேர் ஆதியவாகனங் களையும் அணியப் பொற்கவசமுதலிய அணிகளையுஞ் செய்துதவித் தைப்பூசத் திருவிழா முதலிய சிறப்புக்களைப் பெருமைபெறச் செய்தும், அவ்வூரில் அரண்மனையொன் றமைத்து அதன்கணிருந்து முருகப் பெருமான் திருவடிகட் கான பல திருப்பணிகளையுஞ் செய்திருந்தனர். இங்ஙனம் முருகன்புகழிலும் அவன் திருவடிக்கான பலபணியிலும் தம் கருத்தை முற்றுஞ் செலுத்தியிருந்த மருது துரையவர்களின் வேண்டுகோள் கொண்டே சாந்துப் புலவராகிய நம் புலவர் பெருமான் மைந்தரும் செல்வமும் ஞானமும் வேண்டி இம் மயூரகிரிக் கோவையினை மயின்மலை முருகனின் திருவடித் தாமரைகட் கணித்தனரென்பது,

"செந்திரு மார்பன்மருது நராதிபன் செப்புகென்ன
மைந்தர் செல்வத்தொடு மாஞானம் வேண்டி மயூரகிரிப்
பைந்தமிழ்க் கோவையைப் பாடினன் சர்க்கரை பாலவெங்க
ளிந்திரன் சாந்து மகிபால வால கவீச்சுரனே"

எனவரு மிக்கோவையின் பழைய சிறப்புப்பாயிரத்தாற்
புலனாம்.

இப்புலவர் தாம்பாடிய மயூரகிரிக் கோவையில் மருது பாண்டியன் செய்த முருகனுக்கான திருப்பணிகளைப்புகழ்ந்து பாராட்டியுள்ளார். மருதுபாண்டியன் செய்த மருதாபுரி யென்னுந் தடாகத்தையும் அவராற் கட்டப்பட்ட ஆயிரக்கால் மண்டபத்தையும்

"மருது நராதிபதி
சிந்தையிற் செய்த திருக்குளமீது" (௬க) எனவும்

"மருதுநராதி பன்தாமரைப் பொய்கையின் மற்றவனே
கருதிய வாயிரத்தூண் மண்டபத்தில்" (அ௨) எனவும்

வரும் பாடல்களானும், அவர் முருகனுக்கணிந்த பொற்கவசத்தையும் வெள்ளி மயில் வாகனத்தையும் முறையே

"விரும்பு கவசமருது மகிபதி வேண்டியிட
அரும்பிய வோகை யயில்வேலன்" (153) எனவும்

"வள்ளிமயில் சேர்மயில் மலைக்கே மருதையன்வைத்த
வெள்ளி மயிலை விரும்புங் குகன்" எனவும்

வரும்பாடல்களானும், அவர் செய்தளித்த தேரில் முருகப்பிரான் எழுந்தருளி வருதலையும் அத்திருவிழாவில் செய்யும் அன்னதானச் சிறப்பையும், முருகன் தேர்வடத்தைத் தாமே முன்னின்றிழுக்கும் பணிமேற் கொண்ட அவர்தம் பெருகிய பத்தியையும்

"மைப்பார் புகழு மருது துரைவேண் மயில்வரைமேல்
தைப்பூசத் தேரில்வரச் செய்வதுமன்ன தானஞ்செயும்
அப்பூமியுங் கண்டிட வரலாம்" எனவும்

"தூண்டிய தேரேறினர்மயில்வெற்பர் துரைமருது
பாண்டியனுந் தேர்வடந் தொட்டனன்" எனவும் வரும்

பாடல்களானும், அவர் குன்றக்குடியில் வைத்த தென்னஞ்சோலையின் வளச்சிறப்பை

"என்றைக்கும் வாழுமருது துரை குமரேசருக்குக்
குன்றக் குடியில்வைத்த தென்னஞ்சோலைக் குளிரிளநீர்"

என்ற பாடலானும் சிறப்பித்துப் போற்றுவதோடு அவர் பாவலர்க்குச் செய்யுங் கொடைப்பெருமையை

" ......................முருகன் மயில் வெற்பிற் பாவலர்க்குத்
துரைமருதேந்த் ரன்றரல்போற் பொன்மாரி சொரிகின்றதே"

என்ற பாடலால் மழைபொழியும் வான்றொழிலுக் குவமையாக்கி யுரைத்தலால் மருதப்ப பூபதியின் மாண்பினை நன்கு விளக்கிப் போற்றியுள்ளார். அன்றியும் அவ்வரசரால் நன்கு போற்றப்பட்டுஅவரருகேயிருந்த தமக்குப் பணத்தைப்பற்றிய குறைகள் ஒரு சிறிதும் இல்லையென்பதனை

"வேண்டும் விருந்திட் டுறுதிகள்கூறியவேண்மருது
பாண்டியன் பக்கமிருக்கக் குறைகள் பணத்திலுண்டோ"

என்ற பாடலால் இவர் விளக்கிப் போற்றுதல் இப்புலவர்பெருமானின் செய்ந்நன்றி யறிவைத் தெள்ளிதின் விளக்குவதோடு இப்புலவருக்கு நல் விருந்தளித்து, தளருங்காலத்து உறுதிமொழிகூறிப் பொருளுதவிசெய்த மருதுபாண்டியனவர்களின் கொடை மாண்பினையும் நற்பண்பினையும் இனிது விளக்குதல் அறிந்தின்புறற்பாலது.

---

# தமிழ்மொழியை வளர்த்தற்குரிய வழிகள்

திரு. C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள் M.A. B.L.,

தமிழ்மொழி மிகப்பழமையான மொழிகளுள் ஒன்று என்பதை இப்பொழுது பெரும்பாலும் எல்லாரும் ஒப்புக் கொள்வர். தொல்காப்பியம் என்னும் நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இலக்கண நூல் என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ் மொழியில் இலக்கண நூல் ஒன்று தோன்றி இருக்க வேண்டுமானல் அதற்கு முன்னதாகவே இலக்கிய நூல்கள் பல அம்மொழியில் இருந் திருக்க வேண்டும். ஏனென்றால் "இலக்கியங்கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" என்றார் பவணந்தியார். ஆகவே ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழ் மொழி சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும்.

பண்டைக்காலத்தில் தமிழ்மொழி பாண்டியர் சோழர் சேரர் என்ற தமிழ்நாட்டு மூவேந்தர்களாலும் சிறப்பாக ஆதரிக்கப்பட்டு வந்தது. பாண்டிய அரசர்கள் பண்டைத் தமிழ்ச் சங்கங்களில் புலவர்களாக வீற்றிருந்து தமிழ்மொழி யைத் தங்கள் கண்போல் பாதுகாத்து வந்தனர். செங்குட்டு வன் போன்ற சேர அரசர்கள் சீத்தலைச் சாத்தனார் முதலான பெரும்புலவர்களை ஆதரித்து வதார்கள் என அறிகிறோம். குலோத்துங்கன் முதலான சோழ அரசர்கள் கம்பர், சேக்கி ழார் முதலான சிறந்த தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததுடன் அவர்களைக்கொண்டு சிறந்த தமிழ் நூல்களையும் எழுதச் செய் தார்கள் என்பது பலரும் அறிந்த தொன்றாம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்காலத்தில் தமிழ் நாட் டில் ஆங்கில அரசாட்சி தொடங்கிற்று; அதற்குப்பின் ஆங் கிலமொழி அரசியன் மொழி ஆயிற்று. ஆங்கிலமொழியைக் கற்றவர்க்கே அரசாங்கத்தில் உத்தியோகம் என வந்ததால் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் தங்கள் தாய்மொழியைப் புறக்

கணித்து ஆங்கிலத்தைப் படிக்கத் தொடங்கினர்கள். ஆகவே ஆங்கிலத்துக்கு உயர்வு உண்டாயிற்று; தமிழ் மொழிக்குத் தாழ்வு தொடங்கிற்று.

பண்டைக்காலத்தில் சிறந்த நிலைமையில் இருந்த தமிழ் மொழி இப்போது தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றது என்பது எல்லார்க்கும் தெரிந்ததாகும். தாழ்ந்த நிலைமையிலிருக்கும் தமிழ் மொழியை மேம்படுத்துவதற்குத் தமிழர்கள் செய்யவேண்டியது என்ன? என்பதைக்குறித்து இனி ஆராய்வோம்.

இப்பொழுது அரசியன்மொழி ஆங்கிலமாக இருக்கிறது. அரசாங்க வினைகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டு வருகின்றன. தமிழ் மொழி வளரவேண்டுமானல் 'தமிழ் மாகாணம்' என ஒரு தனிமாகாணம் அமைக்கப்படவேண்டும். அம்மாகாண அரசியன்மொழி தமிழாக இருக்கவேண்டும். பண்டைய தமிழ் அரசர்கள் தமிழ் மொழியை மிகுதியாக ஆதரித்து வந்ததுபோல் தமிழ் மாகாண அரசாங்கமும் தமிழ்மொழியை வளர்ப்பதற்கு மிகுதியாக உதவிசெய்யவேண்டும்.

தவிரவும், தமிழ்மொழி நன்ருக வளர்ச்சி அடையவேண்டுமானல் தமிழ்ப் பல்கலைக்கழகம் (Tamil University) என தனிமுறையில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கவேண்டும். இப்பொழுது சென்னைப்பல்கலைக்கழகம் இருக்கின்றது. அது தமிழ், மலையாளம் முதலான பலமொழிகளைப் பாதுகாக்க வேண்டியிருக்கின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று தனியே இருக்குமானல் அது தமிழ்மொழியையே முழுதும் வளர்த்துவரும்.

அரசாங்கத்தாரும் பல்கலைக்கழகத்தாரும் ஒருமொழியின் வளர்ச்சிக்காக உழைப்பதுடன், அம்மொழியைப்பேசும் மக்களும் அம்மொழியின் வளர்ச்சிக்காகப் பெருமுயற்சி எடுக்க வேண்டும். ஆகவே தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொரு தமிழ்மகனும் தம் தாய்மொழியில் அன்பு கொண்டு அதைவளர்ப்பதற்கும் அதைஉலகில் ஒருசிறந்தமொழியாகச் செய்வதற்கும் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். உதாரணமாக ஆங்கிலேயரைப் பாருங்கள். அவர்கள் தங்கள் தாய்மொழியின்வளர்ச்சிக்காக என்னவெல்லாம் செய்கிருர்கள் என்பதை யுன்னுங்கள். ஆங்கிலேயருள் செல்வர் தங்கள்

தாய்மொழியின் வளர்ச்சியைக் கருதி இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழியிலுள்ள செய்யுட் பாடங்களைச் சொல்லிவைப்பதற்காக போதகாசிரியர்களை (Professor of English Poetry) நியமிப்பதற்குப் பெருந் தொகையை நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த சிறந்தபோதகாசிரியர்கள் பாடங்கள் சொல்லிவைப்பதுடன், சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதித் தங்கள் தாய்மொழிக்கு அதிகச் சிறப்பை உண்டாக்குகின்றார்கள். தவிரவும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சுக்கூடம் (Oxford University Press) என்ற ஒன்று இருப்பது ஆங்கிலம் படித்தவர்களுக்கெல்லாம் தெரியும். அது ஆங்கிலமொழியிலுள்ள அருமையான நூல்களை எல்லாம் கண்ணைக்கவரும் அழகான புத்தகவடிவில் வெளியிட்டுவருகின்றது. அந்த நூல்களைப் பார்த்த உடனேயே அவற்றை வாங்கிப்படிக்க விரும்புகின்றோம். தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்களை எல்லாம் ஆக்ஸ்டு போர்டு பல்கலைக்கழகத்தார் வெளியிடுவது போல தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தார் வெளியிட வேண்டும். இனி, மாக்மில்லன், லாங்மென்ஸ் போன்ற புத்தகப் பதிப்புக்குழுவினர் பெருந்தொகையை மூலதனமாக வைத்துக்கொண்டு, ஆங்கிலமொழியில் எழுதப்படும் சிறந்த நூல்களை அவற்றின் ஆசிரியர்களுக்குப் பெருந்தொகையான பணம் கொடுத்து அவற்றின் உரிமையை வாங்கி, அந்நூல்களை வெளி யிடுகிறார்கள். இந்த விதமாகப் பெருந்தொகையான பணம் நூலாசிரியர்களுக்குக் கிடைப்பதால் சிறந்த நூலாசிரியர்கள் அருமை பெருமை வாய்ந்த நூல்களை எழுதத் தொடங்குகின்றார்கள். தமிழ் நாட்டிலும் மாக்மில்லன், லாங்மன்ஸ் போன்ற கழகங்கள் நிறுவப்பட வேண்டும். அக்கழகங்கள் திறமைவாய்ந்த தமிழ் நூலாசிரியர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்து நூல்களை எழுதும்படி செய்து அவற்றை வெளியிடவேண்டும். அப்படிச்செய்வதானால் சிறந்த தமிழ்நூல்கள் பல தமிழ்மொழியில் எழுதப்படும். பல சிறந்த தமிழ்நூல்கள் உண்டாக தமிழ்மொழியும் சிறப்படையும்.

தமிழ் நாட்டில் நூல்களைப்படிக்கும் தொகையினர் அதிகமானால்தான் தமிழ்மொழியும் வளர்ச்சி அடையும். படிக்குந் தொகையினர் மிகுதிப்படுவதற்குத் துரைத்தனத்தாரும் செல்வரும் கல்வி வளர்ச்சியடையப் போாதரவளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் திருவாவடுதுறைபோன்ற செல்வம் நிறைந்த மடங்கள் சில இருக்கின்றன. ஒரு காலத்தில் இம்மடத்தார் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பெருந்தொகையைச்செலவு செய்து வந்தனர். இப்பொழுது அவ்விதம் அவர்கள் செய்ய வில்லை எனத் தெரிகிறது. இம்மடாதிபதிகள் தங்கள் மடங்களில் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வருவதுடன் தமிழ் நூல்களை எழுதும் ஆசிரியர்களுக்கும் உதவிசெய்து வர வேண்டும். அப்படி அவர்கள் செய்வார்களானால் அவர்கள் கடமையையும் செய்தவர்களாவர்; தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உதவி புரிந்தவர்கள் ஆவர். இச்செவ்வியில், திருப்பனந்தாள் மடாதிபதி சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வித்வான் தேர்வில் முதலாவதாகத் தேறுபவர்க்கு ஆயிரம் ரூபா நன்கொடை அளித்து வருவது மிகுதியாகப் பாராட்டத்தக்கது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

இனி, தமிழ்நாட்டில் பல இடங்களில் தமிழ்மொழியை வளர்ப்பதற்காகப் பல சங்கங்கள் நிறுவப்படவேண்டும். தமிழ்த்தாயின் தவப் புதல்வராய்த் தோன்றின காலஞ்சென்ற பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அச்சங்கம் தொடக்கத்தில் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டு, சிறந்த வேலை செய்துவந்தது. பின்னர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிற்று. இச்சங்கம் தமிழ் மொழிவளர்ச்சியின் பொருட்டு உண்மையான வேலை செய்து வருகின்றது. இச்சங்கத்தின் தலைவரான திருவாளர் T. V. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களைப் போல ஒரு பதின்மர் தமிழ்நாட்டில் இருப்பார்களானால் தமிழ்மொழி இன்றைக்கு மிகுந்த மேம்பாடு அடைந்திருக்கும்.

ஆண்டில் ஒருமுறையேனும் தமிழ் நாட்டிலுள்ள சிறந்த நகரங்கள் ஒன்றில் ஒரு இலக்கிய மாநாடு (Tamil Literary Conference) கூட்டப்படவேண்டும். அம் மாநாட்டில் தமிழ் நாட்டிலுள்ள பேரறிஞர்கள் எல்லாம் கூடும்படி செய்யவேண்டும். அப்பேரறிஞர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குரிய செயல்களைக் குறித்து ஆராயவேண்டும். தவிரவும், அந்த மாநாட்டில் அவர்களால் எழுதப்பட்டுள்ள சிறந்த கட்டுரைகள் படிக்கப்படவேண்டும். வங்காளத்தில் ஆண்டுதோறும் (The Bengal Literary Conference) என்ற மாபெருங்கூட்டம் கூடுகின்றது. அந்தவிதமான கூட்டத்

தால் வங்காளிகள் அடைந்த நன்மை என்ன? வங்காள மொழி மிகச்சுருங்கின காலத்தில் நல்ல வளர்ச்சியை அடைந்தது. தவிரவும், கேரளத்திலும் இந்தவிதமான மா நாடுகள் கூடி மலையாள மொழியை வளர்ச்சி செய்து வருகின்றன. ஆகவே தமிழ் அன்பர்களும் ஆண்டுதோறும் தமிழ் இலக்கிய மாநாட்டைக் (Tamil Literary Conference) கூட்டி வைத்தால் தமிழ்மொழியும் மிகச் சிறிய காலத்தில் பெருஞ் சிறப்பை அடையும்.

ஒருமொழி சிறந்த மொழியாகக் கருதப்பட வேண்டுமானல் அம்மொழியில் பல பொருள்களைக் குறித்துள்ள சிறந்த நூல்கள் பல இருத்தல்வேண்டும். தமிழ்மொழியில் சிறந்த இலக்கிய நூல்கள் இருக்கின்றன; அருமையான இலக்கண நூல்கள் இருக்கின்றன. ஆனல் ஆங்கிலமொழியில் இருப்பது போல, சிறந்த அறிவியல் நூல்களைத் தமிழில் காண்பது அரிது. ஆங்கிலத்தில் சரித்திரம், பொருள். அரசியல், தாவரம், பிரகிருதி, ரசாயனம் முதலான பொருள்களைக் குறித்துள்ள சிறந்த நூல்கள் பல இருக்கின்றன. தமிழ்மொழியில் இப்பொருள்களைப் பற்றியுள்ள சிறந்தநூல்கள் மிகச் சிலவே. இது தமிழ்மொழிக்கு ஒருபெருங்குறையாகும். அக்குறையை நீக்குவதற்குச் செய்ய வேண்டியதென்ன? மேனட்டு மொழிகளில் இப்பொருள்களைக் குறித்துள்ள நூல்கள் பல இருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் மேனட்டிலுள்ள அந்நூல்களைப் படித்து அவற்றில் உள்ள இயல்களைத் தமிழில் மொழி பெயர்த்து நூல்களாக வெளியிடவேண்டும். அப்படி அவர்கள் செய்வார்களானல் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி செய்தவர்களாவார்கள்.

தவிரவும், ஆங்கிலத்தில் சிறந்த புலவர்களது செய்யுட்களுள் மிக இனிமையான செய்யுட்களைத் தொகுத்து தொகை நூலாக (Arthology) வெளியிடுவதுபோல, தமிழிலும் கம்பர் திருவள்ளுவர் முதலான சிறந்த தமிழ்ப் புலவர்களது பாடல்களின் தொகை நூல்கள் வெளியிடப்படவேண்டும். இன்னும், ஆங்கிலத்தில் "The Illustrated London News," 'The sphere' என்ற படங்கள் நிறைந்த இதழ்கள் இருப்பதுபோல, தமிழிலும் ஓவியம் மலிந்த இதழ்கள் தோன்றவேண்டும். "The Illustrated London News" போன்ற இதழ் தமிழ்நாட்டில் எந்நாள் தோன்றுமோ தெரியவில்லை.

தமிழ்நாட்டிலுள்ள மாபெருந்தலைவர்கள் தமிழிலேயே எழுதவும் பேசவும் செய்யவேண்டும். அப்படி அவர்கள் செய்வார்களானால் நம் தமிழ்மொழி விரைவில் மிகுந்த சிறப்பை அடையும். உதாரணமாக உலகம் போற்றும் உத்தமரான காந்தி அடிகள் செய்வதைப் பாருங்கள். அடிகள் மிகுந்த தாய்மொழிப் பற்றுள்ளவர்கள். ஆகவே, அடிகளின் தாய்மொழியான குசராத்தி வளர்ச்சி அடைய வேண்டும் என்ற விருப்பத்துடன் அடிகள் குசராத்தி மொழியில் நூல்கள் எழுதி வெளியிடுகிறார்கள். குசராத்தி மொழியிலுள்ள இதழ்களுக்கு பொருட்கொடை செய்கிறார்கள். நம் தமிழ் நாட்டிலுள்ள பெருந்தலைவர்களும் காந்தி அடிகளைப் போல அவர்கள் தாய்மொழியில் பேசவும் எழுதவும் செய்து வருவார்களானால் நம் அருமைத் தமிழ்மொழி விரைவில் மிகுந்த மேன்மையை அடையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட
# யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 5, பக்கம் 200)

**அந்நரகர்கள்** ஒவ்வொருநரகத்திலும் தமக்குள்ள உடம்பின் அளவு எத்தனை வில் அளவோ அத்தனை யோசனை அளவு (ஒரு வில்லின் அளவுக்கு ஒரு யோசனை அளவு வீதம்) மேலே எழும்பித் தலைகீழாய் மாறிக் கீழே புலால் நிறைந்துள்ள நாற்றமுடைய குழியில் விழுந்து வருந்துவார்கள். (மேருமந்—940, 941, 746, 514, 521, 889.) "பைந்தொடி மகளிராமே பந்தென வெழுந்து பொங்கி, வந்துடைந்துருகி வீழ்ந்து மாழ்குபுகிடப்பர்" (சீவகசிந்—2765,)

நரகங்கள் ஏழ் :—ரத்னப் பிரபை, சக்கராப் பிரபை, வாலுகாப் பிரபை, பங்கப் பிரபை, தூமப் பிரபை, தமப் பிரபை, தமஸ்தமப் பிரபை என்பன. "ஏழுள நரக நாமம் இரதனஞ் சக்கவாலு, வாழிய பங்கந் தூமம் தமந் தமத்தமாகும்" (மேருமந்—936.) "இருளின் இருளும்" (சூளா—துறவு—85) ஒவ்வொரு நரகமும் எத்தனைப் புரைகளை உடையது என்பதனை (மேருமந்—937.) பாவாலும் அதன் உரையாலும் அறிக. இவ்வேழு நரகங்களின் அடியின்கீழ் "நிகோதம்" என்ற நரகம் ஒன்று உள்ளது என்பர். சமண் சமயத்தவர், "படுேயர் நரகமேழும் நிகோதமும் பதேசமுன்னர் உடல்கிடந்தழிந்திடாத இடமில்லை யுணரின் என்றான்" (மேருமந்—110.)

அழலினுள் மூழ்கி யன்ன—"எரி நீரவே நரகம்" (சீவகசிந்—2777.) "எரியன நரகம் மூழ்கி" (மேருமந்—111.) "தீயில் வெம்பு நரகத்தைச் சேறிந்து" (மேருமந்—530.) "எரியினுள் மூழ்கியது என்ன" (மேருமந்—549.) "எரி மூழ்கியனைய. மேருமந்—736.) (நடுகூ.)

விலங்கு கதியின் அழிவு.

38. அங்குலி யங்க [1]மாதி யணுமுறை பெருகி மேன் மேல்
பொங்கிய யீரைஞ் ஞூறு புகைபெறு முடையு டம்பு
வெங்கனல் வினையின் மேனாள் விலங்கிடை புக்கு வீழ்ந்து
நங்களை வந்து கூடி நடந்தன வநந்த மன்றே.

முன் பாடம் :—[1]பாக மணுமுறை.

பொருள் :—வெங்கனல் வினையின் மேனாள் விலங்கு இடை புக்கு அங்கம் அங்குலி ஆதிமேன்மேல் அணுமுறை பெருகி வீழ்ந்து ஈர் ஐ நூறு பொங்கிய உடம்பு புகை பெறும் முடை நங்களை வந்து கூடி நடந்தன அநந்தம் அன்றே.

பொழிப்புரை :—வெவ்விய அனல் போன்ற துன்பத்தினுக்கு ஏதுவான தீவினையினாலே முற்பிறப்புக்களில் விலங்கு கதியில் பிறந்து, உடம்பு சிறுவிரல் அளவு முதலாக படிப்படியாய் அணு அணுவளவாய் முறையே வளர்தல் உறும் பல்வகைப்பட்ட பெரிய உடம்புகளைப் பெற்றுப் பின் இறந்து ஆறும் நரகத்தில் இருநூற்று ஐம்பது வில்லின் அளவு உயர்ந்த உடம்பினராய், இருநூற்று ஐம்பது யோசனை அளவு மேலே எழும்பித்தலை கீழாய் மாறிக்கீழே ஒருயோசனை அளவு நாறும்கெட்ட நாற்றத்தினை உடைய புலால் நிறைந்த குழியில் விழுந்து நம்முடன்

கூடிவருந்திப் பிரிந்தனவாகிய உயிர்கள் பல அன்றோ என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை:— அங்குலி — சிறுவிரல் அளவு. இவ்வளவு கருவில் வளர்ந்த அளவு முதலாகக் கொண்டனர் போலும். பெருகி—வளர்தல் உறும். ஈர்ஐஞ்ஞூறுமுழம்—ஆயிரம்முழம்; இருநூற்று ஐம்பதுவில். பொங்கிய—நீண்ட; உயர்ந்த-புகை —யோசனை. முடை—புலால் நாற்றம்; கெட்டநாற்றம். புக்கு —பிறந்து. வீழ்ந்து—இறந்து. நடந்தன—பிரிந்தன. அநந்தம்—பல.

சிறப்புரை :—ஒருமுழம் — கால்வில்லின் அளவு. "முழமிசை முப்பத்தோர்வில் உயர்ந்தவன்" (மேருமந்—521) என்றதன் உரையால் அறிக. ஒருமுழம் கால்வில்லின் அளவு ஆனதால், ஆயிரம் முழம் இருநூற்று ஐம்பது வில்லின் அளவு எனவும், முன்பாவின் சிறப்புரையுள் குறிக்கப்பட்டபடி இருநூற்று ஐம்பது வில்லின் அளவினையுடைய நரகர்கள் இருப்பது ஆறும் நரகம் எனவும் கொள்ளுக. நரகர்கள் மேலெழும்பி விழுந்து வருந்துவர் என்றதனை முன்பாவின் சிறப்புரையுள் காண்க. நரகர்கள் புலால் நிறைந்துள்ள முடைநாற்றமுடைய குழியில் விழுந்து வருந்துவர் என்றதனை (மேருமந்-514.) பாவினாலும் அதன் உரையாலும் அறிக.

ஈரைஞ்ஞூறு என்றதனை வில்லின் அளவாகக் கொள்ளாமல் முழம் என்னும் அளவாகக் கொண்டது என்னையெனின், ஏழாம் நரகத்தில் உள்ள நரகர்கட்கும் ஐந்நூறுவில் அளவின் மிக்க அளவைக் கூறுதல் நூல்வழக்கு இன்மையால் ஆம். மேருமந்தரர் புராணம் 101-வது கவியிற் கருத்துக்கிணங்க, எவரேனும் இப்பாவினுக்குப் பொருள் கூறுவாராயின், அப்பொருள் சிறப்புடைத்தாகும் என யான் எண்ணுகின்றேன். (நடெச)

### மக்கள் கதியின் அழிவு

39. ஒரிரேனோர் முழங்கை தன்மே[1]லோரோர் பதேசமேறி
முரிவெஞ் சிலைகள் மூவி ராயிர முற்ற வுற்ற
பாரின்மேல் மனிதர் யாக்கை பண்டுநாம் கொண்டுவிட்ட
வாரிவாய் மணலு மாற்ற வகையின வல்லவோ தான்.

முன்பாடம்:—[1]லோரோருப தேச.

பொருள் :—நாம் பண்டு பாரின்மேல் ஓரின் ஓர் முழங்கை தன்மேல் ஓர் ஓர் பதேசம் ஏறிமூரி வெஞ்சிலைகள் மூ ஈர் ஆயிரம் முற்ற உற்ற மனிதர் யாக்கை கொண்டு விட்ட வாரிவாய் மணலும் ஆற்ருவகையின அல்லவோ தான்.

பொழிப்புரை :—நாம் முற்பிறப்புக்களில், பூமியில் ஒன்றின் ஒன்று முழங்கை அளவு முதலாக ஒரு ஒரு படியாய் அங்கங்கள் தோறும் வளர்ந்து வலிய வெவ்விய வில்லுகள் ஆருயிரம் அளவு வரையில் வளர்தல் உறும் மனிதர் உடம்புகளில் பிறந்து பலவகை அளவு உடம்புகளைப்பெற்று இறந்த பிறப்புக்களை அளவிட்டுச்சொல்லுதற்குக் கடற்கரையின் மணல்களும் உறையிடுதற்குப் போதியவாகாப் பண்பின அல்லவோ என்று கூறினுன் அபயருசி.

குறிப்புரை :— ஓரின்ஓர்—ஒன்றின்ஒன்று. முழங்கை தன் மேல்—முழங்கை அளவு முதலாக; ஆகுபெயர். பதேசம்—ப்ரதேசம்; வடசொற்றிரிபு; அங்கந்தோறும். ஏறி—வளர்தல் உறும்; எச்சத்திரிபு. மூ ஈர் ஆயிரம்—ஆறு ஆயிரம்; ($3 \times 2 = 6$.) முற்ற உற்ற—வளர்தல் உற்ற. மனிதர் யாக்கை—மனிதர் உடம்பு. கொண்டு—பிறந்து. விட்ட—இறந்த. வாரிவாய்—கடலின்கரை. ஆற்ரு—போதியவகா. வகையின—பண்பின. தான்—அசை.

சிறப்புரை :—போக பூமியில் வாழும் மக்கள் ஆறுவகைப் பட்ட உத்சர்ப்பிணி காலத்தில் ஒரு முழ அளவின் நின்றும் பெருகி ஆறு ஆயிரம் வில்லின் அளவு உயரத்தைப் பெறுவர் என்பதும், ஆறுவகைப்பட்ட அவசர்ப்பிணி காலத்தில் ஆறு ஆயிரம் வில் அளவின் நின்றும் தேய்ந்து ஒருமுழஅளவு உயரத்தைப் பெறுவர் என்பதும், சமண் சமயநூல் வழக்கு. "ஒரு முழம் பதினையாண்டு யுந்தி யுந்திமேல், வரிசிலையாராயிரம்" (மேரு மந். 1231). அவ்வழக்குப்படி அக்காலங்கள் இடையே மக்கள் பெறும் பலவகை அளவுகளை இந்நூலாசிரியர் தொகுத்துக் கூறினுர் போலும். (ருடு)

### தேவ கதியின் அழிவு.

40. இருமுழ மாதி யாக வெய்திய வகையி னேங்கி
[1]வரிசிலை யிருபத் தைந்தின் வந்தறு மங்க மெல்லாந்
திருமலி தவத்தின் சென்று தேவர்த முலகிற் பெற்ற
தொருவரா லுரைக்க லாமோ வுலந்தன வகந்த மன்றே

முன்பாடம் :—[1]வருசிலே. "வருசிலே திருநுதல்" (மேரு மந்—594.)

பொருள் :—திரு மலி தவத்தின் எய்திய வகையின் இரு முழம் ஆதி ஆக வரி சிலே இருபத்து ஐந்தின் ஓங்கி வந்துறும் அங்கம் எல்லாம் தேவர் தம் உலகின் சென்று பெற்ற உலந்தன அநந்தம் அன்றே ஒருவரால் உரைக்கல் ஆமோ.

பொழிப்புரை :—முற்பிறப்புக்களில் பெருமை மிக்க தவத்தின் பயனுல், அந்த அந்த தேவர்தம் உலகிற்கு ஏற்றபடி இரண்டு முழ அளவு (உயர்வு) முதலாக வரிந்து கட்டப்பட்ட வில்லுகள் இருபத்து ஐந்தின் அளவின் நீளம் (உயர்வு) ஈருக இடையே பல அளவாக வளர்தலுறும் பலவகை உடம்புகளே எல்லாம் பெற்ற நாம் இறந்தனம். அப்படிப் பிறந்து பிறந்து இறந்தது பலமுறை ஆம். அப்பிறப்புக்களே ஒருவரால் அளவிட்டு உரைத்தற்கு ஆகுமோ என்று கூறினுன் அபயருசி.

குறிப்புரை :—திருமலி தவம் — பெருமை மிக்க தவம். உலந்தனம்—இறந்தனம். அநந்தம்—பல. அன்றே—எதிர் மறைவினு; ஆம்.

சிறப்புரை :—நான்குவகைத் தேவர்களுள்ளே பவணர் என்ற தேவரில் அசுரகுமாரர் என்ற பவணதேவர்கட்கு உடம்பின் உயர்ந்த அளவு, இருபத்து ஐந்து வில் அளவு (மேருமந்—1226.) என்பதும், அஹமிந்திரர் என்ற தேவரில், சௌதர்ம்ம ஈசானுதி தேவர்களின் மேலிடத்துள்ள ஹேஷ்டிமம், மத்திமம், உபரிமம் என்ற மூன்று வகையார்க்கும், உடம்பின் உயர்ந்த அளவு, இரண்டு முழம் அளவு (மேருமந்—500.) என்பதும் சமண் சமய நூல் வழக்கு. அவ்வழக்கினே இந்நூலாசிரியர் தொகுத்துக் கூறினர் போலும். அன்றியும், தேவப் பிறப்பினர்கள் அவ்வப் பிறப்புக்குரிய ஆயுளின் கடையில் பதினைந்து நாட்கள் முன்னரே தம் ஆயுளின் முடிபினே அறிந்து வருந்துவர் என்பதும், அவ்வருத்தத்தின் எல்லே அளவில்லது என்பதும் வழக்கு. (மேருமந்—565.) ஆதலால் அக்காலங்களில், அத் தேவ பிறப்பினுர்கள் அடையும் துன்பங்களே அளவிட்டு உரைத்தல் ஒருவருக்கும் இயலாது" எனலும் ஆம்.

"உலர்ந்தன அநந்தம்" "பவங்கள் தோறும், மருவி நாம் மகிழ்ந்து சென்ற பிறப்பும் மற்றதனுக் கப்பால், ஒருவரால் உரைக்கலாகா உலந்தன அநந்த மன்றே" (மேருமந்—1007.) (௩௰௬)

## நான்கு கதிகளின் அழிவு.

41. துன்பகா ரணமி தென்றே துடக்கறு கெனவுந் துஞ்சா
வன்புறு நரகர் யாக்கை யவைகளு மமரர் கற்பத்
தின்பகா ரணமி தென்றே யெம்முட னியல்க வென்றே
யன்புசெய் [1]வனக டாமு மழியுநா ளழியு மன்றே.

முன்பாடம் :—[1] தனக.

பொழிப்புரை :—துன்ப நுகர்ச்சிக்கு ஏதுவானவை என்ற எண்ணத்தினால், இப்பிறப்புக்கள், எம்மைத் தொடராமல் நீங்க வேண்டும் என வெறுக்கப்படினும், வினைக்கீடாக நீங்காது தொடர்கின்ற நரகர், விலங்கு, மக்கள் எனப்படும் அப்பிறப்புகளும், தேவருலகங்களில், இன்பம் நுகர்தற்கு ஏதுவானவைக் என்ற எண்ணத்தினால், எம்முடன் தொடர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்பப்படும் அத்தேவ பிறப்புக்களும், வினையின் பயனாக அழியத்தக்க நாட்களில் அழிவனவாகும் அன்றோ? என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—துடக்குஅறுக—தொடராது நீங்கவேண்டும். துஞ்சா—தொடர்கின்ற. அன்புறு-வெறுக்கப்படினும், அமரர் கற்பம்—தேவர்கள் உலகு. எம்முடன் இயல்க—எம்முடன் தொடர்ந்து நிற்க—கள், தாம், ஏக்கள்—அசை. உம்மைகள்-எண்ணுப்பொருள்.

சிறப்புரை :—தேவர்கள், பவணர், வியந்தரர், சோதிடர், கற்ப வாசிகள் எனப் பலவகையினர் ஆதலால் அன்பு செய்வன எனப் பன்மையாகக் கூறினார் ஆசிரியர். "வெருவறு துன்பமாக்கும் விலங்கினுள் எழுந்துவீழ்தல், நரகிடை மருவுந்துன்பம் நரர்க்கெலாம் குடும்பம் ஓம்பல், மருவிய தேவலோகின் வழுத்தால் வானவர்க்காம், துருவமாய் நின்ற துன்பம் சொன்ன நாற் கதிக்கும்" (மேருமந். 472) "வேந்துயர் நரகின்வீழா வுயிர்களுமில்லை" (மேருமந். 934) "இறந்தனர் என்பதல்லால் யாவரும் இன்றுகாறும் உயிர்வாழா நின்றார் இல்லை" (சூளா. துறவு-8.) (௩௰௧)

## இந்திரர்களின் அழிவு.

42. வந்துடன் வணங்கு வானோர் மணிபுனை மகுட கோடி
தந்திரு வடிக ளேந்துந் தமனிய பீடமாக
விந்திர விபவம் பெற்ற விமையவ ரிறைவ ரேனுந்
தந்திரு வுருவம் [1]பொன்றித் தளர்ந்தன ரனந்த [2]ரன்றே.

முன்பாடம் :—[1]பொன்றத் [2]மன்றே.

பொழிப்புரை :—கூட்டமாகவந்து தம்மைவணங்கும் தேவர்களின் தலையில் உள்ளனவும், இரத்தினங்களைப் பதித்து அழகாகச்செய்யப் பட்டனவும் ஆகிய மகுடங்களின் நுனியைத் தம்முடைய அழகிய கால்களையே பொன்னாலாகிய தட்டுகளாகக் கொண்டு தாங்குதற்கு ஏதுவான மிக்க செல்வத்தினைப்பெற்றுத் தேவர்கட்கு அரசர்களாகிய இந்திரர்கள் ஆயினும், வினையின் பயனாகத் தங்களுடைய அழகிய தேவவடிவம் அழியப்பட்டுப் பின் பலகதிகளில் பிறந்து வருந்தியவர்கள் பலர் ஆவர் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—வானோர்—தேவர். மகுடம்—அரசர் தலையில் அணியும் சிறப்பு அணி. கோடி—நுனி. தமனியம்—பொன். பீடம்—தட்டு. இந்திர விபவம்—தேவ அரசர்களின் செல்வம். இமையவர்—தேவர். இறைவர்—அரசர்; இந்திரர். பொன்றி—அழிந்து. தளர்ந்தனர்—வருந்தியவர்கள் அநந்தர்-பலர்.

சிறப்புரை :—"இந்திர விபவ மேனு நின்ற தோன் றியார்க்கு மில்லை" (மேருமந். 934.) (கூஉஅ)

## சக்கரவர்த்திகளின் அழிவு.

43. மக்களிற் பிறவி யுள்ளு மன்னர்தம் மன்ன ராகித்
திக்கெலா மடிப் படுத்துந் திகிரியஞ் செல்வ ரேனு
மக்குலத் துடம்பு தோன்றி யன்றுதொட் டின்று காறு
மொக்கநின் றார்கள் வையத் தொருவரு மில்லை யன்றே.

பொழிப்புரை :—மக்கள் பிறப்புள்ளும், அரசர்கட்கு அரசராகி உலகம் முற்றும் தன் ஆணையின் கீழ்ப்படுத்தி ஆளும் ஆக்ஞா சக்கரமாகிய செல்வத்தினை உடையவர்களும், (சக்கரவர்த்திகள் ஆயினும்) மக்கள் பிறப்புத் தோன்றிய அந்நாள் தொட்டு இந்நாள் வரையில் பிறந்து தொகையானுருள் இறவாது நின்றவர்கள் உலகில் ஒருவரும் இலர். என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—திக்கு—உலகு. எல்லாம்—முற்றும். அடிப்படுத்தும்—தன் ஆணையின் கீழ்ப்படுத்தி ஆளும். திகிரியம் செல்வர்—ஆக்ஞாசக்கரமாகிய செல்வத்தினை உடையவர்கள்;

கக்கரவர்த்திகள். ஒக்க நின்றார்கள் — தொகையானார்கள். வையத்து—பூமியில். அற்றே—அசை.

சிறப்புரை :—" போன்னணி திகிரியஞ் சேல்வன் " (சீவக சிந்—1203.) " தீதிலாத் திகரியஞ் சேல்வர் " (சூளா—அர—377.) " பிறந்தனர் பிறந்து சாலப் பேருகினர் பேருகிப் பின்னே, யிறந்தன ரேன்பதல்லால் யாவரும் இன்று காறும், மறைந்துயிர் வாழா நின்றார் இல்லையால் வாழி நெஞ்சே சிறந்தது தவத்தின் மிக்கது இன்மையே சிந்திகண்டாய் " (சூளா—துறவு—8.) " மலை மிசை மதியினீழல் பருதிபோல் மத்தயானைத், தலை மிசைக் குடையினீழல் தாணியை முழுது மாண்டார், நிலமிசை யின்றுகாறும் நின்றவர் இல்லை." (மேருமந் — 918.) " அன்று தோட்டின்றுகாறும் " (மேரும—204) (௪௩)

பிறப்பு இறப்புக்களின் இயல்பு.

44. ஆடைமுன் னடிய திட்டோ ரந்துகி லசைத்த லொன்றே
மாடமுன் னதுவிடுத்தோர் வளமனை [1]வதித லொன்றே
நாடி னெவ் வகையு மஃதே நமதிறப் பொடுபி றப்பும்
பாடுவ தினியேன் னங்கை பரிவொழிந் திடுக வென்றான்.

முன்பாடம் :—[1]புதிதின் வாழ்க.

போருள் :—அஃதே எவ்வகை நாடின் உம் நமது இறப் பொடு பிறப்பும், இனி பாடுவது என் என் நங்கை பரிவொழிந் திடுக என்றான்.

போழிப்புரை :—முன் உடுத்திருந்த பழைய ஆடையை அவிழ்த்துக் கீழே வைத்துப் புதியதாகிய ஒரு ஆடையினை உடுத்திக் கொள்ளுதல் ஒரு செயல். முன் வாழ்ந்ததாகிய பழைய வீட்டினை விட்டுப் புதியதாகிய ஒரு அழகிய வீட்டினுள் வாழ்தல் ஒரு செயல். அச் செயல்கள் எவ்வியல்பிற்றே அவ்வியல்பிற்றேயாகும், எவ்வகையால் ஆய்ந்து பார்ப்பினும் நம்முடைய இறப்பும் பிறப்பும். மேலும் சொல்லத்தக்கது ஒன்றும் இல்லை தங்கையே! நீ வருந்துதலின் நீங்குவாயாக என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :— அடி—கீழ். அசைத்தல்—சட்டல்; உடுத்தல். ஒன்று—ஒரு செயல். வளம் — அழகு. மனை—வீடு. பாடுதல்—சொல்லுதல். நங்கை—தங்கை. பரிவு—துன்பம். ஒக்கள்—அசை.

சிறப்புரை :—"எந்தையும் யாவும் நேரா ராய்விடின் இறத்தல் ஒன்றோ, சிந்தனை பிறிதொன்றாகிச் செய்தவ முயறல் ஒன்றோ" (சீவகசிந்—1050.) "செல்வனை யின்று நாடிச் சேவடி தொழுதல் ஒன்றோ, அல்ல திவ்வுடம்பு நீங்க வேற்றுல கடைதல் ஒன்றோ". (சீவகசிந்—1745.) "உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி, விழிப்பது போலும் பிறப்பு". (திருக்குறள்—339.) (சP)

அபயமதியின் அஞ்சாமை.

45. [1] அண்ணனீ யருளிற் றெல்லா மருவருப் புடைய மெய்யி
னண்ணிய நமதென் னுள்ளத் தவர்களுக் குறுதி நாடி
விண்ணின்மே லின்ப மல்லால் விழைபயன் வெறுத்து நின்ற
கண்ணனாய் நங்கட் கின்னங் கட்டுரை யென்னை என்றாள்

மூன்பாடம் :—அண்ண நீ.

பொருள் :—"கண்ணனாய் நாடி" எனக் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—அண்ணலே! நீ அருளினமேல சொல்லப்பட்டவைகள் எல்லாம் வெறுக்கத் தக்க யாக்கையினைத் தமது என்று விரும்பிய மனத்தினை உடையவருக்கு உறுதி பயப்பனவாகும். கண் அன்னாய்! நன்கு ஆய்ந்து பிறவாமைக்கு ஏதுவான விண்ணுலகின் மேலேயுள்ள சித்தபதவியை யன்றிப் பிறவாகிய இன்பப் பொருளை வெறுத்து நின்ற நமக்கு மேலும் உறுதிச் சொல் எற்றுக்கு என்று கூறினாள் அபயமதி.

குறிப்புரை :—நாடி—ஆய்ந்து. இன்பம்—சித்தபதவி; ஜைனர்தம் முத்திநிலை—விழைபயன்—பிறவாகிய இன்பப்பொருளை கட்டுரை—உறுதிச் சொல். (சPக)

(தொடரும்.)

# மற்றும், சோழர் கோயிற்பணிகள்

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A, B. L.,
தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர்.

இராச ராசனுக்குப் பிறகு அவன் மைந்தன் முதலாம் இராஜேந்திரன் கி. பி. 1014 முதல் 1042 வரை அரசாண்டான். சோழர் தலைநகரைத் தஞ்சையிலிருந்து மாற்றித் தனக்கென, தற்போதைய திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் தாலுகாவிலுள்ள **கங்கைகொண்ட சோழபுரம்** என்ற நகரை உண்டாக்கி, அதில் தஞ்சைக் கோயிலை முழுதும் பின்பற்றி கட்டப்பட்டுள்ள ஒரு கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலின் மூர்த்திகளும் மிகப் பெரியவை. இவ்வாலயத்திலுள்ள சிற்பங்கள் மிக்க வனப்புற்றவை. தென்னிந்தியாவிலும், தென்னிந்தியச்சிற்பம் கடைப்பிடித்தொழுகலான ஜாவாத்தீவிலும் உள்ள மிகவுயர்ந்த சிற்பங்களினும் இவைகள் மேம்பட்டனவென்பர். இக்கோயிலின் விமானம் 186 அடி உயரமுள்ளது. தஞ்சைக்கோயிலைப் போலவே கர்ப்பகிருகத்திற்கு முன்னுள்ள இதன் மண்டபங்களும், மற்ற அமைப்புக்களும் தாழ்வாகவேயிருப்பதால், கோயில் சுற்றுப்புறங்கள் முழுவதிலும் இவ்விமான கோபுரமொன்றே பெருமிதமாய் உயர்வெய்தி நிற்கின்றமையின் அது சேய்மையினின்று பார்க்கக் கம்பீரமான அழகிய பெருமிதத் தோற்றத்தை யுடையது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் எடுத்த இப்பெரிய கோயிலேயன்றி இராஜேந்திரன் தான்வென்ற இடங்களிலெல்லாம் பிற கோயில்களையும் அமைத்துள்ளான். அக்கோயில்களுக்குத் தனது நிபந்தங்களைத் தவிர ஊர்ப்பொதுச் சபையாரால் தாமே எப்போதும் குறைவின்றி நடத்திக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளையும் செய்வித்தான். இதன் உண்மை மைசூர் நாட்டில் கோலார் எனப்படும் குவலாலபுரத்திலுள்ள இவனது துர்க்கையாலயமொன்றில் உள்ள சாசனத்தால் புலனாகும். இக்கோயில்பூசை செய்வதற்காகச் சைவப்பிராமண னொருவனும், மற்ற பூசைக்கேற்ற பணிகளைச் செய்வதற்கு நான்கு பிரமசாரிகளும், அபிஷேகத்திற்கு நீரும், புஷ்பமும், மாலைகளும்,

மற்றசாமான்களும் தயார் செய்துவைக்க வேலையாட்களும், ஆலயத்தைச் சேர்ந்த நந்தவனத்தைச் செப்பனிட்டு, நீர்பாய்ச்சி, சரிவர வைத்துக்கொள்ளுவதற்காக இரண்டு குடும்பங்களும், கோயிற் காப்புக்காக மூன்று காவற்காரர்களும், மூன்று பைரவர்களும், நான்கு யோகீசுவரர்களும், தேவாரப் பாக்களைப் பண்ணுடன் பாடப் பத்துப்பெயர்களும், ஒரு கணக்கனும், இருபத்து நான்கு தேவர் அடியார்களான நடனமாதர்களும், ஒரு குயவனும், ஒரு வண்ணானும், ஒருசோதிடனும், மேற்பார்வையிட உத்தியோகஸ்தன் ஒருவனும், ஒரு தச்சனும், ஒரு கருமானும், வியாகர்ணம் முதலிய கலைகளைப் போதிக்க வல்ல ஆசான் ஒருவனும், கோயிலின் திருப்பணி செய்வதற்காகவும், அதன் கருமங்களை நடத்துவதற்காகவும் அமைக்கப்பட்டிருந்தனர். ஊர்ப்பொதுமன்ற ஏற்பாடுகளின்படி நெய், எண்ணெய், அரிசி, காய் கறிவகை, பழம், சந்தனக்குழம்பு, சாம்பிராணி, கற்பூரம், பன்னீர், வெட்டிவேர், ஏலக்காய் முதலிய பொருள்களையெல்லாம் தம்தம் கடமைப்படி பலர் தாமாகவேகொணர்ந்து ஆலயத்துக்குக்கொடுப்பது வழக்கமாயிருந்தது. கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்களைப் பயிரிட்டோர் நிலத்தில் விளைந்த நெல் முதலிய தானியவகைகளைத் தாமே கோயிலதிகாரிகளிடம் கொண்டுவந்து சேர்ப்பிப்பது கடமையாகவும் இருந்தது.

அன்னசத்திரங்களை நடத்துவதற்கும், ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கும், வேதமோதும் அந்தணர்களுக்கு வெகுமானங்கள் கொடுப்பதற்கும் கோயிற் சிப்பந்தியாட்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கும் தனியாக ஏற்பட்ட 'நிலதானம்', 'வரிதானம்', 'பணக்கோடை' முதலியவற்றைப் பற்றி அனேக கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு பெரிய கோயிலினுள்ள விசாலமான மண்டபங்களிலே திருமுறைகளும், ஏனைய அறிவு நூற்களும், பயன்தரு கலைகளும் பயிலப் பெற்றுவந்தன. கோயிலில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்யவும், அவ்வப்போது ஏற்படும் மராமத்து வேலைகளைக் கவனிப்பதற்கும், கோயில் சிப்பந்திகளைப் பராமரிப்பதற்கும் நிபந்தங்கள் பல ஏற்படுவவாயின. கோயிலின் ஒருபால் வேதமும், திருமுறைகளும் ஓதப்பட்டு வந்தன; மற்றொருபால்,பாரதம், தர்மசாத்திரம், புராண இதிகாசங்கள், வியாகர்ணம், யாப்பு, தர்க்கம், சோதிடம், வானநூல், மருத்துவம், மற்றும் பல கலைகளும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு

வந்தன. திருவொற்றியூர்க் கோயிலில், வியாகரணம், சோமசித்தாந்தம், பாணினீயம் ஆகிய இவை கற்பிக்கப்பட்டன. கி. பி. 1023-ல் முதலாம் இராஜேந்திரன் காலத்திலே கோயில் பராமரிப்புக்கும், மறைநூல் கற்பிப்பதற்கு 340 மாணவர்களுக்கும், கற்பிப்போருக்கும், கோயிலை ஒட்டித் தங்குவதற்கான விடுதி ஒன்றுகட்டி தானஞ்செய்ததாக எண்ணாயிரம் (1) கோயில் கல்வெட்டு கூறுகிறது. 1122-ம் வருடத்திய கல்வெட்டொன்று துறவிகளுக்குச் சோறும் துணியும்கொடுக்கவும், மறை ஓதுவோருக்கும், கற்பாருக்கும் தானம் அளிக்கவும் 44 கிராமங்கள் தேவதானமாகக் கொடுக்கப்பட்டனவெனவும் கூறுகின்றது.

வீரராஜேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன் கட்டளைப்படி மாதவன் எனப்பெயரிய வைசியன், ஜனநாதமண்டபம் என்றதொரு பெரிய மண்டபம் நிறுவி, அங்கு மறைகள், மற்ற நூல்கள், ரூபாவதார முதலிய கலைகள் கற்பிக்க கலாசாலையும், மாணவர்கள் தங்க விடுதியும், "வீரசோழன்" எனப் பெயரிய 15 படுக்கைகளையுடைய (Hospital) ஆதுலசாலையும் ஏற்படுத்தினான் என்று திருமுக்கூடல் (2) கல்வெட்டால் தெரிகிறது. மாணவர்களுக்குத் தங்க விடுதியேயன்றி உணவும், சனிதோறும் நீராட எண்ணெயும், விளக்கெரிக்க விளக்கெண்ணெயும் கொடுக்கப்பட்டன. இவைகளைச் சேர்ந்த வேலைகளுக்காக ஒரு பரம்பரை வைத்தியனும், ஒரு செல்லியக்கிரியை பண்ணுவானும் (ரணவைத்தியன்) மருந்து மூலிகைகள் கொணருவதற்கு இரண்டு ஆட்களும், நோயாளிகளைக் கவனிக்க இரண்டு மருத்துவப்பெண்களும் (nurses), வியாகரணம் முதலிய நூல், சிவதர்மம், சித்தாந்தம் கற்பிக்க ஆசிரியரும், மற்றும் பொது வேலைக்கென ஒரு ஆளும் நியமிக்கப்பட்டிருந்தனர். அறுபது வேலி தேவதானமாக விடப்பட்ட வியாகர்ண வியாக்கியான மண்டபம் ஒன்று திருவொற்றியூர்க் கோயிலுள் அமைக்கப்பட்டதென அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

ஒவ்வொரு கோயிலைச்சுற்றியும், கடிகை, அக்ரஹாரம், பிரம்மபுரி முதலிய பெயரைத் தாங்கிய அந்தணர் கூட்டங்கள்

---

(1) Ins. Nos. 333 & 335 of 1918.
(2) Ins. No. 182 of 1916.

வசித்தன எனவும், அவர்கள் இருக்க வசதிகளும், **சரஸ்வதி பண்டாரம்** எனப் புத்தகசாலைகளும், இருந்தனஎனவும், ஓரிடத்தில் 108 அந்தணர் குடும்பத்தினர் வசித்தனர் எனவும் 1913-ம் வருடத்திய 277ம் கல்வெட்டு கூறுகின்றது. இவ்வாறாகக் கல்விப் போதனைகளுக்கும், மற்றும் கலைகளையொட்டிய ஆராய்ச்சிகளுக்கும் ஆலயமே இடமாக அமைந்திருந்தது.

மற்றும், நமது பேராலயங்களிலேதான் அரசர்களது துலாபாரம், இரணியகர்ப்பம் முதலிய முடிசூட்டு சம்பந்தமான சடங்குகளும் நடைபெறுவது வழக்கமாகயிருந்தது. அவைகளும் அவரவர் பட்டத்தரசிகளுடனிருந்து இயற்றப்பெற்றமை கவனித்தற் குரியதாம். இதனை,

"ஸ்ரீ கோவிராசகேசரி வன்மரான ஸ்ரீ ராச ராச தேவருக்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராசேந்திர சிங்கவளநாட்டு மண்ணிநாட்டு பிரம்மதேயம் வேம்பற்றூராகிய சோழமார்த்தாண்ட சதுர் வேதி மங்கலத்து மகா சபையோம் கையெழுத்து நம்முடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ ராச ராச தேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலா பாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்தி சத்தி விடங்கியார் இரணிய கருப்பம் புக்கருளி, இத்திருவிசலூர் மகாதேவர்க்கு அக்கார வடிசில் அமுதுக்கு வேண்டும் நிபந்தங்களுக்காக வைச்ச காசு" என்னும் கல்வெட்டால் (1) அறியலாம்.

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 13-ம் நூற்றாண்டில் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் துலாபார மண்டபங்களைக் கட்டி வைத்தமையும், இந்நூற்றாண்டில் சோழபாண்டிய மன்னர்கள் சிதம்பரம் பெரிய கோயிலிலேயே முடிசூடிக் கொண்டமையும் அறியற்பாலன.

பல கல்வெட்டுகள் பழங் கோயில்களைப் புதுப்பிக்கும் முறைகளைத் தெரிவிப்பன.

"திருமழுவாடி உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் அருளிச்செய்த திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் தாங்கி ஸ்ரீ விமானத்துள்ள கல் வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்க" என்றும் "ஆக இவ்வனைவர் கண்காணியாலும், இவ்வனைவர் கணக்கினாலும் கல்வெட்டுவித்தபடி முன்பு கல்வெட்டுச் சேர்ந்த பொத்தகப்படி"

(1) Ins. 42 of 1907.

என வந்துள்ள [1]கல்வெட்டுக்களால், திருமந்திர ஓலை நாயகர் அரசன் அருளிப்பாட்டினைத் தம் கையெழுத்திட்டுத் திருமுகத்தினைத்தூதுவர் வாயிலாகஊர்ச்சபைக்கும் ஊரதிகாரிக்கும் விடுப்பதும் அவர்கள், திருப்பணி செய்வோர் விமானம் வாங்கு முன், அதன்கண் உள்ள கல்வெட்டுக்களை அவர்களைக்கொண்டு ஓலையில் எடுத்தெழுதுவித்து, விமானம் கட்டி முடிந்த பின்னர் பலர் கண்காணிப்பின் பேரில் தாம் குறிப்பிடுமிடத்தில் அவற்றை மீளவும் வெட்டுவிப்பதும் ஆகிய வழக்குண்மை அறியலாம். இம்மாதிரியாகவே பராந்தகன்[2]காலத்துத் திருவிடைமருதூர்க் கோயிலிலும், திருவல்லம் கோயிலிலும்,முதலாம் குலோத்துங்கன் காலத்து சித்தலிங்கமடம் ஸ்ரீவியாக்கிரபாதேசுவரர் கோயில்[3] திருப்பணியிலும் நடந்தேறினமை காணலாம்.

சிவன் கோயில்களின் நிபந்தங்களில் தேவாரத் திருப்பதிகங்களும், மணிவாசகர் திருச்சாழல்,[4] முதலிய பாக்களும், அகோபிலம் போன்ற வைணவத் திருப்பதிகளில் நாலாயிரப் பிரபந்தங்களும் பாடுதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இராசராசன் I சிவபக்தனாய் விளங்கி, முழுதும் மறைபட்டிருந்த திருமுறைப் பாசுரங்களைத் தேடி, நம்பியாண்டார் நம்பிகளின் உதவியால் தில்லையில் அவைகளைக் கண்டு முறைப்படுத்தியது யாவரும் அறிந்ததொன்றும்.

அக்காலத்தில் நடனங்களும், நாடகங்களும் பெரும்பாலும் ஆலயங்களிலுள்ள அரங்க மண்டபங்களிலேயே நடைபெற்றன. காமரசவல்லி, திருக்களர் கோடீசுவரர் உடையார் சந்நிதியில் மார்கழி, வைகாசித்திருவாதிரை விழாக்களில் மூன்றுநாள் சாக்கைக் கூத்து நடித்த சாக்கைமாராயனுக்கு நிலதானம் வழங்கப்பட்டது எனவும் (Ins. 65 of 1914), விக்கிரமசோழன் 14-வதுயாண்டு கல்வெட்டொன்றில், திருவெங்கவாசல் ஈசனார் முன் ஒன்பது கூத்துக்கள் நடித்ததற்கு எழுநாட்டு நங்கை என்பாளுக்கு நிலதானம் (Ins. 253 of 1915) செய்யப்பட்டது எனவும் கண்டிருத்தல்காண்க.

கோயில் நிர்வாகங்களில் சோழர்கள் மிக்க ஊக்கங் காட்டினமை பலகல்வெட்டுக்களால்அறியக்கிடக்கின்றது. அரசர்கள் தாமும், அரசருடைய அதிகாரிகளும் ஊர்தோறும் போய்க் கவனித்து வருகையில் கோயில்களையும், அதன் பொருள்களையும்

1. Ins. Nos. 91, 92 of 1895.
2. Ins. 199 of 1907; 234 of 1907.
3. Ann. Epi. Rep. 1910 P 91.
4. Ins. 165 of 1906.

கண்காணித்தனர். திருமாற்பேறு[1] அக்னீசுவரர்கோயில் நிபந்தங்கள் நடவாமலும் அதன் தேவதானங்கள் பிறரால் அபகரிக்கப்பெற்றுத் தினசரித் திருவமுது இரண்டு நாழியாகக் குறைவுபட்டிருந்ததால் மதுராந்தகன் கண்டராதித்தனூர் தாமும் அவ்வூர் பஞ்சாயத்தாரும் விசாரித்து, கோயில் அறைகாரனுக்கு அபராதம் விதித்துத் தேவதான நிலங்களை மறுபடியும் சேர்த்துக் கொண்டதாகவும் தெரிகிறது. மற்றும்[2] அச்சோழனே வடஆர்க்காடுஜில்லா திருவல்லத்தில் அம்மாதிரியான நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிகிறது. கூகூர்[3] கல்வெட்டொன்றில், அவ்வூர்க்கோயிலில் நிபந்தங்கள் நடைபெறுதுபோக, இராசராச சோழன் அலுவலாளர் ஒருவரால் அது கண்டுபிடிக்கப்பட்டு, களவாடியவனுக்கு அபராதம் விதித்து அப்பொருளைக்கொண்டு ஒரு தங்கத்தட்டுசெய்து கோயிலுக்குக் கொடுத்ததும், இராசராசன் I ஊர்கள் பவனி வரும்போது திருவெறும்பூர்க் கோயில் கணக்குகளைச் சிறுகுடையூர் காளி ஆதித்தன் என்பான் தணிக்கை[4] (Audit of accounts) செய்தான் என்பதும், முதற்குலோத்துங்கன் காலத்து அரசியல் வினைஞர் திருப்பனந்தாளில்[5] கோயில் திருக்கையொட்டி பண்டாரத்தைத் தணிக்கைசெய்யுங் காலத்து அருச்சகர்கள் மூன்று தடவைகளில் நகைகளையும், பரிகலன்களையும் அபகரிக்கக் கண்டு, அரசன்முன் கொணர, 540 காசு அபராதம் விதிக்க, அவர்களில் ஒருவன் தன் பகுதியான தொகையைக் கொடுக்க முடியாது கோயில்முறையில் தனது பாகத்தில் 4½ நாள் விட்டுக் கொடுத்ததாகவும்; குலோத்துங்கன் III, திருவொற்றியூர்[6] இராசராசன் மண்டபத்தில் அமர்ந்திருந்த போது ஒரு தேவதான கிராமம் விளைவின்றிக் கிடப்பதாக முறையிட, அது பின்னர்ச் சரியான குத்தகைக்கு விடப்பட்டதென்றும் அவரவர் கல்வெட்டுகளாலறிகின்றோம்.

சோழமன்னர் கோயில்களுக்கென விடுத்த தேவதான நிலங்களும், நிபந்தங்களும் எண்ணிறந்தன. அவர்கள் கொடுத்த நிலங்களுக்குக் குடிமையைத் தவிர்த்து, அதற்குக்கடமையாக இன்னின்ன விளைபொருளில் இவ்வளவென்பதையும் வரையறுத்திருந்தார்கள். இராசராசன் I பெரும்பற்றப்புலியூரில்[7] **அறப்பெருஞ்செல்வி** என்னும் அறச்சாலையை உண்டாக்கி அந்நிலப் பட்டயங்களைக் கோயிலிலுள்ள **திருக்கையொட்டி**

1. Nos. 282, 283 of 1906.
2. S. I. I. III. p. 102.
3. No. 285 of 1918.
4. No. 109 of 1915.
5. Ep. Rep. 1915. p. 46.
6. No. 368 of 1912.
7. Ins. No. 267 of 1913.

(Temple treasury)யில் சேர்ப்பிக்கவேண்டுமெனவும் அவன் கட்டளையிட்டமையைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. குலோத்துங்கன் III [1] கல்வெட்டொன்றில், எண்ணெய், திரி, விளக்கேற்றுவதற்காக 1100 காசு மூலதனமாகவைத்தும், அம்முதற்பொருளை ஐந்தாண்டிற்கொருமுறை கோயில் அதிகாரிகள் முன்பு கொணர்ந்து காட்டவேண்டுமென்றும் கண்டிருக்கிறது. அக்காலத்திய அரசியல்நிலையில் பொருள் மறையாதிருக்கவேண்டிச்செய்த முறையீதொன்றும். தேவதானங்கள் போதாத முறையில், ஊர் மன்றத்தார்—நாட்டிலும், சிற்றூரிலும் விளைநிலங்களில் மா ஒன்றுக்குக் குறுணி வீதம் தானியமும், பாக்கு மரம் ஒன்றுக்கு பாக்கு ஒன்று ஆகவும், ஒவ்வொரு குடியானவனும் ஓர் உழக்கு எண்ணெயும் கொடுக்கவேண்டியதென்றும், அவற்றையெல்லாம் அரசனின் குடிமையை வசூலிக்கும் அதிகாரியே வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்கவேண்டியதென்றும் காமரசவல்லி [2] கல்வெட்டொன்று குறிக்கின்றது.

சோழர் காலத்துக் கிராம பரிபாலனமும் மிக மேன்மையடைந்திருந்தது என்பது வெளிப்படை. ஊர்ப்பொதுக் காரியங்களைக் கவனிப்பதற்குக் கணப்பெருமக்கள், கணவாரியப் பெருமக்களான கூட்டம் (Assembly) இருந்தன. இவர்களின்கீழ் சிறிய (Sub-Committes) கூட்டங்களாக, பொதுக் கிராம காரியங்களைக் கவனிக்க கிராம காரியம் என்று ஒன்றமைக்கப் பெற்றிருந்தது. ஸ்ரீகாரியம் அல்லது கோயில் வாரியம் என்பது கோயில்களின் காரியங்களைக் கண்காணித்து வந்தது. இவர்களின் அதிகாரிகள் மத்தியஸ்தர் என்ற பெயருடையவர். கிராமம், ஏரிக் கணக்குகளை எழுதுபவர் தினம் நான்குநாழி நெல்லும் ஆண்டுக்கு ஏழுகழஞ்சு பொன்னும், ஒரிணைக் கூறையும் (சோடி வேட்டி) பெறுவர். இவர்கள் கணக்குகளுக்கு உத்தரவாதம் செய்ய பழுக்கக் காய்ச்சிய மழுவைப்பிடித்து உறுதி கூறவேண்டும். அது சுடாதுபோயின் உண்மை விளங்குவதுடன் அவருக்கு அவ்வாண்டின் வருவாயிற் காற்பங்கு, 'பாதசேட'மென மிகுதியாக வழங்கப்பெறும். சுட்டுவிடுமாயின் பத்துக் கழஞ்சு பொன் அபராதம் கொடுக்கவேண்டியதென்று வடஆர்க்காடு, செய்யாறு தாலுகா, கரைக்கோட்டு பிரமதேயக் கல்வெட்டுகளால் Epi. Rep. 1916 p.115. தெரிகிறது.

இவ்வாறாக, முதலாம் இராசேந்திரனுக்குப்பின் வழிப்போந்தார் சைவப்பற்றின் மிக்காராய் அவர் எடுப்பித்த கோயில்களும், அவைகளுக்கு விடப்பெற்ற நிபந்தங்களும்

1. Ins. No. 264 of 1913. 2. Ins. No. 139 of 1915.

பலவாகும். அவைகள் ஒவ்வொன்றினையும் தனித்துக் கூறுமிடத்துப் பெருகும். ஆயினும், குறிப்பாக இராசாதிராசன் I எடுப்பித்த குடந்தை[1] நாகேசுவரசுவாமி கோயிலும்; விக்கிரம சோழன் சமீன் புங்கனூருக்கு அணித்தாய் கோயாற்றார் என்ற உத்தம சோழபுரத்தில் இருங்கோளீசற்கு எடுத்த கோயிலும், இரண்டாம் இராசராசன் திருப்பணி செய்த திருப்பனந்தாள் கோயிலும், இராசாதிராசன் II எடுத்ததும் திருப்பணிசெய்ததுமான தாராசுரம் 'இராசராசேச்வரமும்', வீரராசேசந்திரனுக விளங்கிய குலோத்துங்கன் III எடுப்பித்த திருபுவனம் [2]கம்ப ஹரேசுவரர் கோயிலும் போற்றப் பெறுவன. மற்றும் சுங்கந்தவிர்த்த சோழன் எனப்பெயரிய முதலாம் குலோத்துங்கனே தமிழ்நாட்டில் முதன் முதலாக ஞாயிறு வழிபாட்டிற்கெனக் கோயிலைக் கட்டியவனுவன். சூரியனர்கோயிலென வழங்கும் கோயில் இவனதேயாம். வேம்பற்றூர் திருவியலூருக்கடுத்து கற்கடேசுவரர் எனப்பெயரிய, அருமருந்துநாயகருக்கு கோயிலும் முன்மண்டபமும் எடுப்பித்தவன் இவனே[3].

இவைபோன்ற சரித்திரகாலச் சோழர்களால் திருப்பணி செய்வித்த கோயில்களேயல்லாமல் சைவசமயாசாரியர் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிய கோயில்கள் பல, சோழநாடு முழுதும் பரந்துகிடப்பன. அவைகளிற் பலவற்றின் பெயர் மாத்திரமே தேவார க்ஷேத்திரக் கோவை, அடைவுத்திருத்தாண்டகம் முதலிய திருப்பதிகங்களில் தெரிவன. இவைகள் நமது சமயாசாரியார்களின் சைவத் தொண்டினுக்கும், சோழதேசத்தினரது ஆழ்ந்த மதப்பற்றிற்கும் சான்றுவன.

சோழமன்னர்கள் தொன்றுதொட்டு வெற்றியும் புகழுமே தமது அணிகலன்களாகக் கருதித்தமிழர்களது பேராசைத் தமிழ் நாட்டில் நிலை நிறுத்தியும், இமயம்வரை தங்கள் புகழை நிறுவியும் ஆண்டவனருளைப் பெறுதற்கு முயன்று, கடவுட் பத்தியிற்றிகழ்ந்தார்கள். அவர்கள் எடுப்பித்த கற்றளிகளும், அவைகளுக்கான நிபந்தங்களும், அவைகளை என்றும் நினைப்பூட்ட அக்கற்றளிகளின்மீது பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் அழியாதிருப்பன. மற்றையதான அவர்களின் அரசியலும், நாட்டை அமைதியுடன் காத்தற்பொருட்டு நிறுவிய கிராமக் கூட்டங்களுமாகிய இவற்றையும் அவர் தாம் கடவுட்டிருப்பணியில்வைத்த பேரன்பினுருவமாய கோயில்களே சான்றுகி நின்று நன்கு விளக்குகின்றன.

1. Epi. Rep. 1910 p. 91. 2. Ins. 14 of 1908, 99, 114 of 1906.
3. Ins. 190 of 1907.

உ

# வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. துப்புசாமிப் பிள்ளையவர்கள்
*தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை*

வரலாறு:—*இயலழகும் இறையருளும் பெற்றுக் கவின் பெறு வனப்புடையது நம் தமிழகம். இஃது இன்றும் பண்டும் என்றும் குன்றாப் புகழ்தரூஉம் கொடைச்செல்வம் கொண்டது. கொடையான் மேம்பட்ட கோப்பெருமன்னரும் குறுநிலவேந்தரும் பெருநிலக்கிழவரும் மறுவிலா மக்களும் மிகுந்துவாழ்ந்த பண்டைநாளில் நமது தமிழகம் எல்லா நலனும் வளனும் கொண்டு உலகின் ஒப்புயர்வில்லா நாடாக மிளிர்ந்தது. அந்நாளினைக் கடைச்சங்க நாள் எனக் கூறுப. அஃது இற்றைக்கு ஓராயிரத் தெண்ணூறாண்டுகட்கு முற்பட்டதாகும்.*

*நம் தமிழகத்தே, தென்பெண்ணையாற்றால் திகழுறும் திருக்கோவலூர், அந்நாளில் மலையமாநாடு எனவும் மலாடு எனவும் பெயர்பெறும் நாட்டின், முதனகராக இலங்கிற்று. அந்நாட்டை, காரி என்ற ஒரு குறுநிலவேந்தன் புரந்துவந்தான். மலையமா நாட்டின் தலைவனாகக் காரி விளங்கியமையால், அவன் மலையமான் காரியெனவும் அழைக்கப்பெற்றான். மலையமான்காரி, ஒரு வள்ளல், தன்பால் வந்திரப்பவர் எத்தகையராயினும் அவரது உள்ளமுவப்ப வேண்டுவன அளிக்கும் பெற்றியனுமாவன். அவனது நாட்டின் நெடுவரை முள்ளூர்மலை என்பது; அவனுக்குரிய வெற்றிமிக்க சிறந்த குதிரை, 'காரி' எனப் பெயர்பெறும்.*

*மலையமான்காரி கொடையான் மேம்பாடுற்றது போலக்கல்வி கேள்விகளானுஞ் சிறந்து விளங்கினான். கபிலர், மாறோக்கத்து நப்பசலையார் போன்ற புலவர் பெருமக்களது கூட்டுறவினின்றும்*

என்றும் பிரியானுய், அவர்கட்குக் களிறும் தேரும் களிப்புடன் நல்கினன். மற்றும் தன்னை நாடிய புலவர்கட்குத் 'தேர்க் கொடை' மிகுதியுஞ் செய்தமையால், இவன் **'தேர்வண் மலையன்'** எனவும் அழைக்கப்பெற்றான்.

கொடை வளனுங் கல்வி நலனுங்கண்ட தேர்வண்மலையன், வீரச்செல்வமும் விளக்கமுறப் பூண்டனன். பாண்டியருஞ் சேரருஞ் சோழரும் அவனைப் போர்த்துணை நாடினராயின், அவனது தோள்வன்மையை எளிதிற் கருதவியலுமோ? ஒருக்கால் உறந்தையாண்டசோழன் பெருநற்கிள்ளி, மேற்கரைத்தொண்டியின் கோச்சேரமான்-மாந்தரஞ்சேரலிரும்பொறையால் எதிர்க்கப்பட்டபோது, தேர்வண்மலையனின் படையுதவிகொண்டே அச்சேரனைவென்று, தன் நகரில் 'இராசசூயம்' என்ற ஒரு பெரிய வேள்வியையும் புரிந்தான். தேர்வண்மலையன், முடியுடைத் தமிழகவேந்தர்களாகும் சேரர் சோழர் பாண்டியர்கட்கு ஒல்லும் வகையானெல்லாம் ஒப்பற்ற உதவி புரிந்தமையான், மலையமான் திருமுடிக்காரி எனவும் சிறப்பிக்கப்பெற்றான். ஒருபொழுது, ஆரியநாட்டு மன்னன் ஒருவன் திருமுடிக்காரியை எதிர்த்து, மலையமாநாட்டின்மீது படையெடுத்து வந்தான். அஃதறிந்த வள்ளல், தம் படைசூழ நின்று அவ்வாரியனை முள்ளூர் மலைப் புறத்தே முதுகிட்டுப் போமாறு வென்று வாகை சூடினன். இவ்வாறு மாற்றலர் மருளவும் புலவர் போற்றவும் புரவலர் வாழ்த்தவும் பேறுபெற்ற வள்ளல் தேர்வண்மலையனும் திருமுடிக்காரியினது, புகழும் பெருமையும், நாளேற, நாளேற இந்நானிலமுழுதும் பரவலாயின.

இஃதிவ்வாறாக, மலையமாநாட்டின்மேற்பால், குதிரைமலை நாட்டின் தலைவனாக 'வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி' என்றொரு குறுநிலவேந்தனிருந்தான். அவன், புலவர் பெருமக்களாற் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றவன். இம்மாநிலஞ் சுருங்குமாறு அவனது கொடைவளம் பெருகியிருந்தது. அவன்றன் போர்வலிகண்டு முடிமன்னர் பலரும் அஞ்சினர். இத்தகைய வீரருள் வீரனும் அஞ்சி, எவ்வாறோ மலையன்மீது பகைமை

கொண்டான்: அவனது நாட்டைப்பற்றவும் உளங்கொண்டான். எனவே, ஒருநாள் ஒரு பெரும்படையுடன் திருக்கோவலூரையடைந்து, அதனை முற்றுகையிட்டான். மலையமானோ, நெடுமானஞ்சியின் படைவலிக்கு ஆற்றாது நகரைவிட்டு ஓட, திருக்கோவலூரும் அதியன் ஆளுகைக்குட்பட்டது.

அதியமானின் போர்வலிக்கு ஆற்றாதோடிய காரி, தனது பெண்டு பிள்ளைகளைப் பிரிந்து, சேரமான் பெருஞ்சேர விரும்பொறை என்ற வேந்தனையடைந்து, படைத்துணை நாடினன். சேரமானோ, விற்றொழில்வல்ல, கொல்லிமலை நாடாளும் ஓரி வள்ளலை வெல்லவேண்டுமெனப் பல்லாற்றானு முயலுபவனாதலால், காரியின் துணைகொண்டு கொல்லியைப் பற்றுதற்கு உன்னி, அவனது வேண்டுகோட் கிணங்கினான். சேரமான் கருதியவாறே, காரியும் கொல்லியின்மீது சேரன்படையைச் செலுத்தி, வள்ளல் வல்வில்-ஓரியை வானுலகாளப்போக்கினன்.

திருமுடிக்காரியின் பெருந்துணைக்கு மகிழ்ந்த சேரமான் பெருஞ்சேரல், அவன் விழைந்தவாறு, தனது மாபெரும்படை சூழ, தகடூர் நகரைத்தாக்கி, அதியமானஞ்சியை விழுப்புண் பெற்றுப் போரில் வீழுமாறு வென்று, மலையமாநாட்டுத் திருக்கோவலூரை மீட்டுக் காரியின்பாற் சேர்த்தனன்.

வள்ளல் மலையமான் திருமுடிக்காரியும், பின்னர் மண்ணவர் போற்ற இம்மாநிலம் புரந்து, புலவர்போற்ற இனிதே வாழ்ந்து இறையருளோடு இன்புற்றிருந்தான். நலம்! நலம்!! நலம்!!!



## காட்சி க.

உறுப்பினர்:—அம்பலநாதர், நன்மாவன், இளநாகன், படை முதல்வன், மற்றும் பலர்.

இடம்:—திருக்கோவலூர்—குமரகோட்டம்

காலம்:—காலைப்பொழுது

[மலையமாநாட்டுக் குடிகள், மன்னன் காரியின் சிறப்புக் குறித்து முருகனை வழிபடல்.]

அம்பலநாதன் :— (நன்மாவன் மலர்தொடுக்க இளநாகன் மகிழ்ந்து நிற்க அம்பலநாதர் முருகன்முன் மொழிதல்.) உலகுயிர்க் கெல்லாம் தலைவ! நின் திருவருள் நோக்கின்றேல், கங்குல் பகல் காலவெல்லையுட்படுவதும் கருதரிய விண்ணும் கடிதுசெல்லுங் காற்றும் கரைகாணுக்கடலும் இவண் கட்டுப்படுவதும் ஆகுமோ? நின்னைக்கருதுந்தொறும் அன்பராகுநர்க்கேற்படுகின்ற அமுத வாரியன்ன ஓரின்பம், ஆ! எத்தகைய உயிர்ப்பேற்றை யளிக்கின்றது. கருவிலுருவாயமைந்த நாள்தொட்டு, கருத்தழிந்து உயிர்ப்புநீங்கிக் காலன் பின்னே ஏகும்வரையில், இவ்வுயிர், நினை வாலுஞ் செயலாலும் எத்துணை மாறுதல்களைப் பெறுகின்றது. இவ்வுலகில் வந்தவாறும் பின்னர் இவ்வுலகை விட்டுத் தான் செல்லுமாறுமுணராது, என்னென்னவோவெல்லாம் ஒன்று பலகோடியாக உளத்திற்கொண்டு, உண்மை வழியறியாது, உருவழிந்து போகுநாளில், என் உயிரே! உயிரின் உயர்ப் பொருளே! நினது அருளல்லாது நாயினுங் கடையேற்கு உய்யு மாறுண்டோ? கற்பொதும்பில் அடியாரைக் காத்த அருள் வேலா! நின்னையல்லால் எங்கட்கு வேறு துணையில்லை. (அன் புடன் வணங்குதல்—பிறகு ஆண்டிருந்தாரை நோக்கி) அன்பரீர், நமது வேந்தர்பெருமான், கண்ணிற்கு இமைபோல நமக்குள்ளார் என்பதை நான் விளக்க வேண்டியதின்று. அவர் நலம் பெருகினுற்றானே நாமும் இன்பத்துடன் அமைதியாயிருக்கலாகும். ஆதலால் நாம் இன்று, நம் நாடும் மொழியும் வேந்தனும் சிறக்க முருகனை வழிபடுவோம்.

**நன்மாவன் :**—அருள் நிறைசெல்வ! தங்கள் கருத்துக்கு மாருக யாங்கள் என்றும் எதுவும் கருத விரும்போம்; அந்நிலையிலும் யாங்கள் இல்லை. மேலும் 'நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மக்களின் நலத்தின்பாற் கருத்தூன்றி, மண்ணில் எவரும் மகிழ ஆட்சிசெய்யும் மன்னவனே, உயிராகின்ருன்' எனத் தாங்கள் பன்முறை கூறிவரும் பொன்மொழியை எங்கள் நெஞ்சுதான் மறக்குமோ? பெரியோய்! மன்னர் மேன்மை கருதி யாங்கள் இன்னும் புரிவன எவை இருப்பினும் அவற்றையும் இன்னே கொள்வேம்.

**இளநாகன் :**—அண்ணலே! 'இம்மண்ணுலகில், இயற்கை நலந்தோன்றச் சீரும் செழிப்பும் மிகுந்த நாடாக இருப்பினும் இருள் அடர்ந்த நெடிய மரங்கள் செறிந்த காடாக இருப்பினும் அன்றி, ஆழ்ந்த பள்ளமோ, உயர்ந்த மேட்டுப் புலமோ ஆயினும் தகுதியும் பிறர்நலங்காணும் பெற்றியுமுற்ற பெரியார்கள் எங்குள்ளார்களோ, அதுவே நலமலிந்த நிலமாகும்' என்பது பொய்யா மொழியன்ருே? ஆதலின், இம்மலையமாநாட்டின் புகழ் மலிந்தோங்குதற்கு நாளும் ஆவன புரியும் தங்களைப் போன்ற ஆன்ருேர் நடுவில் நம் மன்னர் வாழ்க்கையில், அவருக்கு ஏதேனும் குறைவருமோ? நம் மன்னர் சிறந்து நீடுவாழ யாங்களும் தங்களுடன் ஆவன ஆற்றுவோம்.

**அம்பலநாதன்:**—நன்று, நன்மாவ! இளநாக! உங்கள் கருத்துக்கு மகிழ்ந்தேன். நான் இன்று, நமது மன்னரின் சிறப்புநிலை ஒன்று கருதியே தங்களிடம் இவ்வாறு வினவினேன். அஃதாவது, நமது மன்னர்பெருமானின் பயிற்சிகளுள் மிகச்சிறந்ததாகவுள்ள 'குதிரைப்பயிற்சி' தொடங்கிய திருநாளாகும் பெருநாள் இன்றுதான் ஆகும். 'காரி-காரி' என இத் தமிழகம்யாவும் சிறப்புற வழங்கும் நம்வேந்தரின் திருப்பெயர், பெருமை மிக்க போர்வலிநிறைந்த 'காரி' என்ற பெயரினைப் பெற்ற சிறந்த குதிரையை அன்னவர் கொண்டதாலன்ருே ஆகும். மலையமான் காரி என்ற சிறந்த திருப்பெயரைக் கொள்ளுதற்கு முதன்மையாகவுள்ள இக் குதிரைப் பயிற்சி நாள் கொண்டாடவே, இன்று வழிபாடு செய்ய விரும்பினேன். நன்மாவ! வழிபாட்டிற்குரியன யாவும் திட்டம் செய்க. இன்று நமது படைத்தலைவர் 'கடியநெடுவில்லி' இங்கு வருவதாக மொழிந்துள்ளார். ஆதலான் நீ விரைவில் யாவும் திட்டம் செய்க.

**இளநாகன்:**—பெரும! அதோ அவரும் வருவதாகத் தெரிகின்றது. யானும் நன்மாவனுடன் வேண்டுவன புரிகின்றேன்.

[கடியநெடுவில்லி தமருடன் முருகன் திருமுன் வருதல்.]

**அம்பலநாதர்:**—வருக, படைமுதல்வ! வருக! வருக!! இப்பொழுதுதான் தங்கள் வருகையைப்பற்றி ஈண்டுள்ளவர்கட்கு அறிவுறுத்தினேன். தாங்களும் இவண் அணுகினீர்கள்.

**கடியநெடுவில்லி:**—வணக்கம், அம்பலநாதரே! வணக்கம். நான் இன்று காலை மன்னவன் கோயிலுக்குச் சென்று, அங்கு நம் படையைச்சார்ந்த பல தகுதியினருக்கும் நம் வேந்தர்பெருமான் சார்பாகப் பல பரிசுகள் தந்து, நம் நாட்டவர்களின் உரிமையை புரக்கவும் அவர்களது வாழ்வு சிறக்கவும் எம்மவர்கள் கொண்டுள்ள பொறுப்பினை வலியுறுத்து முகத்தான், ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தி நமது அரசநன்றியை அறிவித்தேன். மேலும் நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்து பெருமக்கள் பலரும் இன்றுமாலை வருவார்களாதலான், யான் நம் முருகன்வழிபாட்டிற்குப் பின்னர், தங்களையும் உடன்கொண்டு செல்ல விழைந்துள்ளேன். அதற்குத் தாங்களும் இசைவீர்களெனவே கருதுகின்றேன்.

**அம்பலநாதர்:**—அவ்வாறே வருகின்றேன். கரும்புதின்னக் கூலியுமுண்டோ? தங்கள்பின்னே மன்னவன்கோயில் செல்ல எனக்கு எத்தகைய தடையுமில்லை. இதோ நமது அன்பர்கள் வழிபாட்டிற்குரியனயாவும் திட்டஞ்செய்து விட்டனர். நாமும் நம் பெருமான் வழிபாட்டைத் தொடங்குவோமாக.

[அம்பலநாதருடன் யாவரும் முருகனைப் பராவுதல்.]

பாட்டு

பூமகள் மார்புறை திருமாலும்
புகழ்மலி நாமகள் துணையோனும்
வானவர் தேவியை மகிழ்வோனும்
வந்து வழிபட வாழ்வோனே!
தேவர்கள் தேடியுங் காணாத
தீவணன் தேவியின் அருள் பாடி
வீரர்கள் போற்றிசை விழைவோனே
விளங்கிடு வேன்மயில் முருகோனே!

## காட்சி உ.

உறுப்பினர் :— மலையமான், கடியநெடுவில்லி, புலவர், மலாடுடையார், அம்பலநாதர், அமைச்சர், தூதுவன்-வீரவேண்மா, காவலன்.

இடம் :— திருக்கோவலூர் மலையமான் கோயில்.

காலம் :— முற்பகல்.

[இராசசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளியின்தூதுவன், மலையமான் காரியிடம் படைத்துணை வேண்டல்.]

கடியநெடுவில்லி:—பகைஞரஞ்சுமாறு தோள்வலிபெற்ற பெரும! வணக்கம். இன்று நம் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வருகின்ற மூவேந்தர்கள் தம்முள் நட்பின்றி ஒருவரை யொருவர் பகைத்தும் ஒருவர் தாழ்விற்கு மற்றவர் மகிழ்ந்து மின்றும் அவை நிமித்தம் அறநெறி யல்லாதனவற்றைக் கைக்கொண்டும் நாட்டைப் பாழாக்கி வருகின்றனர். அன்றியும், புலவர் பெருமக்களைக்கூட வேவுகாரர்களென்றும் ஒற்றர் களென்றும் ஐயுற்று அவர்களைத் துன்பத்திற்குள்ளாக்கவும் கருதிவிட்டனர். இன்னும், நம்போன்ற குறுநில மன்னர்களின் கொடை, ஆட்சிநலம், மேன்மை இவற்றால் அழுக்காறு கொண்டு, வாய்ப்பு நேர்ந்த விடத்து, போர் செய்யவும் தலைப் பட்டிருக்கின்றனர். இவற்றை எல்லாம் நன்கு ஆய்ந்தே, நமது குதிரைப்படை, தேர்ப்படை ஆய இவற்றிற்கு உயர்ந்த பயிற்சி களைத் தந்தும், யானைப்படை, காலாட்படை இவற்றை முன் னிருந்ததைவிட மிகுதியாக்கியும் நமது படைவலியைத் தங்கள் ஆணையை எதிர்நோக்கிப் பெருக்கியுள்ளேன். மேலும், நமக்கு மேற்பாலண்மையிலுள்ளவனும் வீரருட் சிறந்த வள்ளலுமாகிய அதிகமான், நம் நாட்டின் வளத்தை நாளும் பேசுகின்றனனும். அதனையுணர்ந்த நாம் என்றும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது எவரானும் வலியுறுத்தப் படுவதன்றோ? ஆதலால் தாங்கள் எனது செயலை ஏற்றருளுமாறு வேண்டுகின்றேன்.

மலையமான் :—படைமுதல்வ! நம் நாட்டின் உயர்வு காண வும் நமது குடிகள் பகைப்புறத்துற்ற தீமையால், பசி, பிணி முதலியவற்றால் துவண்டு மாளாது, அமைதியும் நல் வாழ்வும்

பெறுதற்குரிய வகையில், நீவிர் முன்னேற்பாடாகப் படையினைப் பெருக்கி, நாட்டின் பாதுகாப்பிற்காகச் செய்துள்ள நுமது தொண்டினைப் பாராட்டுகின்றேம். புதிதாக அமைத்துள்ள படைகட்குத் தக்க முறையிற் பயிற்சியளித்துப் போர்க்களத்தில் வாகைசூடுமாறு அவர்களது உள்ளத்தில் திட்பமும், உடல் வலியில் ஒட்பமும் தோன்றச் செய்க.

புலவர் மலாடுடையார் :—வீரர் மரபின் விளக்கா யமைந்த வேந்தே! நம் நாட்டிற் போல வீரப் பெண்மணிகளை பிறநாடுகளிற்காண்பதரிது. நம்மவர் கொண்டுள்ள உறுதியைக் கூறுகின்றேன், கேண்மின், 'ஆண்பிள்ளைகளைப்பெற்று வலிமையுள்ளவர்களாகக் காப்பது பெற்ற தாயாகிய என்னுடைய கடமையாம்; தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, செயல்கள் ஆகிய இவற்றால் அவனை நிறைந்தவனாகச் செய்து தன்பிள்ளையின் உயர்வு மிகுமாறு செய்தல் தந்தையின் கடமையாம்; போர்க் கருவிகளாய வேல், வாள் இவற்றைச் செம்மையாகக் கூர்மைசெய்துதந்து அவனை ஊக்குதல், கொல்லனின் உரிமைச் செயல் ஆகும். அரசனே, அவ்விளைஞனின் நற்பண்புகளும் நல் வினைகளும் நாளும் பெருகுமாறு புரத்தல்செய்யின், அக்காளையன்னான் மாற்றரசர் போரிலே ஒளிமிக்க வாட்படை கொண்டு, பகைவர்களைக் கொன்று அவர்களது யானையைப் பிளந்து குவித்து, வெற்றி மாலையுடன் வருவதையே, தனது உற்றகடமைகளாகக் கொள்வான்', என மிக்க வலிமை கொளுத்தும் வீரமொழியுடன் புகலும் நம் வீரத் தாய்மார்களிருக்க, நாம் எற்றிற்கு அஞ்சுவது?

அம்பலநாதர் :—தமிழ்மொழி பேணும் தகைமையோய்! எங்கள் தாய் போன்ற மன்ன! எனது வணக்கம் உரியதாகுக! இன்று நமது நாட்டின் குடிமக்கள், தங்கள்பாற் கொண்டுள்ள அன்பினைத் தாங்கள் அறியாததன்று. ஆயிரம் சிறுமீன்களின் நடுவில் அவற்றைப் புரக்கும் தாய்மீன் நின்று காப்பதுபோல, தாங்கள் எங்களை அல்லும் பகலும் ஓம்பிவருதலை யாங்கள் மறக்க வியலுமோ? எத்துணை மன்னர்கள் கூடிலென்? மிக்க எண்களோடு கூடிய நால்வகைப் படைகளுங் கொண்டு மாபோர் தொடுத்து வந்தாலென்? யாங்கள் அனைவரும் எங்கள் படை முதல்வர் வகுத்த நெறியிலே யமர்ந்து, அரச கடமையைக் கழித்தல் என்ற வகையில் நில்லாது, உடல்களாய எங்கட்கு உற்ற உயிராகும் தங்களது வென்றியையே ஒருமுகமாக நாடிப் போர் புரியும்போது, அவர்களால் என்ன ஆகும்? பெரும!

வலிய எலிகள் மிகப்பல கூடி யொலிப்பினும், ஒரு சிறு கரு நாகம் சீறி உயிர்த்தால் அவை சிதர்ந்து ஓடிப்போமன்றோ?

மலையமான் :—அன்புமிக்க புலவர் பெருமானே! அம்பல நாதரே! தாங்கள் எம்மாட்டுக் கொண்டுள்ள பேரன்பினைப் போற்றுகின்றேம். தங்களைப் போன்ற தக்கார் இனத்தே மாகிய எம்மைச் செற்றார் எவர்தாம் எதுதான் செய்ய விய லும்? தங்கள் போன்ற ஆன்றோர்கள் துணை கொண்டு வாழும் எமக்கு, எத்தகைய இடர்ப்பாடும் இவ்வுலகிவில்லை என்பது திண்ணம். (காவலன் முன்வந்து பணிதல்) ஏடா, காவல! யாது செய்தி?

காவலன் :—மலாடுடைய கோவே! நமது நெடுமணிமாட நீடுயர் வாயிலில் பொன்னி நன்னாடாம் புகழ்ச் சோழநாட்டின் உறந்தை நகரிலிருந்து 'சென்னியின் தூதர்' என ஒரு வீரர் போந்து, தங்கள் ஆணை நோக்கிக் காத்திருக்கின்றார்.

மலையமான் :—நன்று காவல! விரைவில் தக்க விருது களுடன் அத்தூதுவரை உள்ளே அழைத்து வருக? (காவலன் வெளிச்செல்லுதல்.) பெருமக்களே! எச்செய்தி கொண்டு சோழரின் தூதுவர் இவண் வருகின்றார் என அறிகிலேம். யாம் அறிந்த வரையில் அவர் நம்மிடம் ஏதேனும் ஒரு துணையையே நாடுவர் எனக் கருதுகின்றேம். (தூதுவர் உள்நுழைதல்)

தூதுவன் வீரவேண்மா :—முட்போன்ற கூரிய பற்களுற்ற பாம்பு, இடியொலியென மருண்டு அஞ்சுமாறு போர்முரசஞ் செய்து வீரர்நடுவே வெற்றிச் சமர்புரியும் கொற்றவ! மலாடு டைய கோவே!

'செந்தமிழ் நாட்டின் சீர்நிறை செல்வனும்
செம்மணி முடியுடை மூவருள் ஒருவனும்
கன்னிப் பொன்னியாம் கவின்பெறு காவிரி
தன்வளங் கொண்டு தனிப்பெரு நலங்கொள்
சோர்விலார் மிக்க சோழர்தம் நாட்டின்
ஊரெனப் புகழ்பெறும் உறையூ ரதனைத்
தலைமையாக் கொண்டு தன்புகழ் பரப்பிக்
கலைநலன் கொடைத்திறன் காவல் நேர்மை
அறநெறி இன்சொல் ஆன்றோர் தொடர்பு
மறம்பயில் போர்த்தொழின் மாண்புறப்பெற்றே
உற்றவின் நண்பன் கொற்றக் கோமகன்
எயில் மூன்றெரித்த இறையடி தொழுவோன்

ஒருதனி மகன்பால் உறுசிறு பிழைக்கு
மறுவிலா அவன்மேல் மாத்தேர் ஊர்ந்தே
அறநெறி வழாஅது அரசு செலுத்திய
மறைபுகழ் மன்னன் மனுநீதி மரபினன்'

ஆய சோழன் பெருநற்கிள்ளியது திருவடிதொழூஉம் அடியேன், "தூதுவன் வீரவேண்மா", இங்கு தங்களைப் பணிகின்றேன்.

**மலையமான் :**—பொன்னி நன்னாட்டுச் சென்னியின் தூதுவ! உனது வருகை எமக்கு நல்வரவாகுக! நம் நாட்டுப் பெருங் கோமன்னன் சோழன் பெருநற்கிள்ளி நலந்தானா? அஃவர் எமக்கு விடுத்த செய்தி யாதோ?

**தூதுவன் வீரவேண்மா :**—தெண்ணீர்ப் பெண்ணையின் திருக் கோவலூரின் தேவே! எம் மன்னர்கோமான், சோழன் பெருநற் கிள்ளி நலமே. ஆயினும் அவருடன் அவரது பகைவனுய சேரநாட்டுமன்னன் 'மாந்தரஞ்சேரல் இரும்பொறை' இது போது தக்க படையுடன் போர் தொடுத்து நிற்கின்றான். தங்களது போர்த்திறனும் தங்கள் படையின் நற்பயிற்சி யும் எமது மன்னர் நன்கு உணர்ந்தவராதலால், தங்கள் படை யுடன், அவரது செலவில் அவண் போந்துத் துணைபுரியுமாறு, தங் களை வேண்டிக்கொள்ளுகின்றார். நாள் மிகவும் அண்மைத்தாக இருப்பதால், தவக்கமின்றித் தாங்கள் இன்னே அங்குவரவேண்டு மெனவும் பலகால் வேண்டுகின்றார். இதுவே எனது தூது மொழியாகும்.

**மலையமான் :**— நன்று, தூதுவ! நாம் அது பற்றி எம் அமைச்சர், படைமுதல்வர், பெருமக்கள் இவர்களுடன் கலந்து பின்னர் விளம்புவேம். அதுவரையில் நீவிர் ஈண்டுத் தங்கு வீராக.

**தூதுவன் வீரவேண்மா :**—அவ்வாறே பெரும!

**மலையமான் :**—அமைச்சரே! நமது கோப்பெருமன்னர், சோழர் பெருநற்கிள்ளியின் தூதுவர் வீரவேண்மாவிற்கு வேண்டும் வசதிகள் யாவும் விரைந்து புரிக. யாமும் ஒல்லையில் இன்று மாலையே கூடி, நம் வேந்தற்குத் துணைபோதற்குறித்து சூழ்ந்து ஆவன புரிவோம்.

**காவலன் :**—மலையர்கோவன்-மாபெருங்காரி, வாழ்க!

**யாவரும் :**—வாழ்க! வாழ்கவே!!

தமிழ்த்தாய் வாழ்க

## கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

# இருபத்திரண்டாவது ஆண்டுவிழா

இவ்வாண்டுவிழா வெகுதானிய புரட்டாசி ௧௫, ௧௬, ௧௭ (1, 2, 3—10—1938) ஆம் நாட்களாய சனி, ஞாயிறு, திங்களில் நடைபெற்றது. முதல்நாள் காலையிலும் மாலையிலும் கல்லூரி மாணவர்களின் பந்தய விளையாட்டு நடைபெற்றது. இரண்டாம் நாள் மாலை நிகழ்ந்த கலைமகள்விழாவில் தஞ்சை நீதிமன்ற அரசாங்கத் துணை வழக்கறிஞர் திருவாளர். D. மகாலிங்கம் பிள்ளையவர்கள் பொருட்காட்சிக் கூடத்தைத்திறந்துவைத்து மாணவர்களுக்குப் பரிசு வழங்கினர். அடுத்து மணி 4½க்கு நிகழ்ந்த பஞ்சாபகேசன் கழக ஆண்டுவிழாவில் தஞ்சைக் கல்லூரித் துணையிணைக்கண்காணிப்பாளர் திருவாளர். K. கிருட்டின மூர்த்தி ஐயரவர்கள் தலைமையேற்றார்கள். சங்கக் கல்லூரி மாணவி உருக்குமணி, **'பெண்களும் கல்வியும்'** என்ற பொருள் பற்றியும் புலவர் புகுமுகவகுப்பு மாணவன் த. உலகநாதன் **'தமிழ் கற்பதேன்'** என்ற பொருள்பற்றியும் இக்கல்லூரியின் பழைய மாணவரும் இதுபொழுது திருவையாற்று அரசர் கல்லூரி வித்துவான் வகுப்பு மாணவரும் ஆகிய திரு. குரு. வேல்சாமி அவர்கள் **'என்னினுமினியான்'** என்ற பொருள்பற்றியும் அவையோர் விரும்பப் பேசினார்கள். அடுத்து 7-மணிக்கு **'இராஜஸ்ரீ'** என்ற ஆங்கில நாடகம் மாணவர்களால் இனிதே நடிக்கப்பெற்றது.

மூன்றாம்நாள் 4½ மணிக்குத் தொடங்கப்பெற்ற கல்லூரியாண்டுவிழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர் திருவாளர். ச. க. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் தலைமையேற்றார்கள். கடவுள்வாழ்த்து, தமிழன்னை வணக்கம் முடிந்தவுடன் கல்லூரித் தலைமையாசிரியரால் சென்ற ஆண்டின் அறிக்கை படிக்கப்பெற்றது.

தலைவரவர்கள் தம்முன்னுரையில் கல்விபற்றிய நுண்ணிய கருத்துக்களையும் கற்கு முறைகளையும் உணர்த்து முகத்தான் தமிழ்மொழியின் பழஞ்செய்யுள் நயங்களைத் திட்பமும் நுட்பமும் பொருந்த விரித்துரைத்தார்கள். பின்னர் கரந்தைத்

தமிழ்க் கல்லூரியாசிரியர் வித்துவான். திரு. க. வெள்ளைவாரண முதலியார் அவர்கள் 'கருணைமறவன்' என்ற பொருள்பற்றி ஒரு சிறந்த விரிவுரையாற்றினார்கள். தலைவரவர்கள் முடிவுரையில் கருணைமறவன் கோவலனுதலை இனிமை பொருந்த எடுத்துரைத்தார்கள். அடுத்து இரவு 7 மணிக்கு இக்கல்லூரியின் தலைமையாசிரியர் திரு. சிவ. குப்புசாமி பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற **கண்டீரக் கோப்பெருநள்ளி** என்னும் தமிழ் நாடகம் கல்லூரிமாணவர்களால் அழகுபெற நடித்துக்காட்டப்பெற்றது. பின்னர் சங்கத்தலைவர், இராவ்சாகிபு, தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் செந்தமிழ்ப் புரவலர், அவைத்தலைவர் சொற்பொழிவாளர் முதலியவர்களுக்கு நன்றிகூற விழா இனிதே நிறைவேறியது.

## புத்தக மதிப்புரை.

### எயினியும் நாகனும் எனும் இளந்தமிழ்க் காதலர்

இது திருச்சிராப்பள்ளி உறையூரிலுள்ள சங்கநூல் தமிழகத்தாரின் முதலாவது வெளியீடு. தமிழ்ச்சங்கங்கள் நூல்கள் வெளியீட்டை மேற்கொள்ளுவது சிறந்த தமிழ்த்தொண்டாகும்.

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்புக்களையும் கல்வி, கற்பு, கொடை, வீரம், அன்புடைமை, அருளுடைமை ஆகிய நாகரிகப் பண்புகளையும் மக்கள் உளங்கொள்ளவும், பண்டைத் தமிழ் இலக்கியங்களின் மாண்புகளைத் தமிழ் மக்கள் எளிதே உணர்ந்து பயன்பெறுதற்காகவும், ஆய முறையில் இயற்றப் பெற்றிருக்கும் இவ்வுரைநூல் சிறந்ததொரு புதுவிருந்தாகும்.

தமிழன்பர்கள் இந்நூலை நாடெங்கும் பரவச்செய்யும் நன் முயற்சியை மேற்கொள்ளுதல் கடமையெனஉணர்ந்து, முயலுவ ராகில், இக்கழகத்தினர் வெளியிட எண்ணியிருக்கும் கைக்கிளை, பைங்கிளியாள், குறிஞ்சிப்பாட்டு முதலிய நூல்களும் வெளி வரல் எளிதாகும்.

இத்தகைய தமிழ்த் தொண்டினை மேற்கொண்ட சங்கநூல் தமிழகத்தினருக்கும், அன்னார்க்கு உறுதுணைவராயிருந்து நூல்களை இயற்றித்தரும் தமிழ்ப்புலவர் மதுரை, அழகிய அம்பலவாணர் அவர்கட்கும் எமது நன்றி உரியதாகும்.

விலை ரூபா 1 அணா 2.